# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 07 அதிர்வு 73 ஆடி 2023 editor@ethiroli.com தொ.பே:1800 960 162

Transco CARGO
We love to deliver
ONLY TRANSCO DOES WEEKLY SHIPMENTS TO SRI LANKA
Track your parcel online
Air delivery within 4-7 days NEW
Door delivery available
1300 187 267
TranscoCargo.com.au

SHIPPING SCHEDULE

| CUT OFF | SL ARRIVAL |
|---|---|
| JUL 1* | AUG 11 |
| JUL 8 | AUG 18 |
| JUL 15* | AUG 25 |
| JUL 22 | SEP 1 |
| JUL 29* | SEP 8 |
| AUG 5 | SEP 15 |
| AUG 12* | SEP 22 |
| AUG 19 | SEP 29 |
| AUG 26* | OCT 6 |

*Exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield

## ஏழாவது ஆண்டில் எதிரொலி...



MCN Cakes

Birthday கேக்



Wedding கேக்





Butter, Ribbon & Chocolate கேக்

Also available :
Fish buns, Onion buns,
Stuffed Godamba Roti,
Lamprais, Rice & Curry
& many more ...



MCN Cakes
Shop 105, Level 1
Dandenong Plaza
in the food court near Reject Shop/Westpac
(03) 90188188
0433662477
Open 7 days

See Page 09




ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

# ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

## நாணயமிக்க பணப்பரிமாற்றம் 'டன்டிநொங்' இல் புதியதோர் சேவை

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403
royalinfomoney@gmail.com


KUMARAN'S
Cafe
Enjoy the South Indian Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au




# என்ன நடக்கிறது ரஷ்யாவில்?



கார்த்திக்வேலு

ஒரிரு நாட்களுக்கு முன்பு வரை பொது ஊடகங்களில் பரவலாக அறிமுகம் இல்லாத இந்தப் பெயர் திடீரென்று உலகமெங்கும் ஊடகங்களில் முதல் பக்கத்தில் இடம் பிடித்தது. உக்ரைன் போரில் ரஷ்யா சார்பாகப் போரிட்டு வந்த 'வாக்னர் குரூப்' என்ற தனியார் கூலிப் படையின் தலைவரின் பெயர்தான் அது - யெவ்கெனி பிரிகோஜின்.

ரஷ்ய ராணுவத் தலைமை மீது கொண்ட நீடித்த அதிருப்தியால் திடீரென்று ரஷ்யாவுக்குள், ரஷ்யாவையே எதிர்த்து தனது படைகளை வழிநடத்திச் செல்ல ஆரம்பித்தார் யெவ்கெனி பிரிகோஜின். உக்ரைனில் இருந்து வெளியேறி தெற்கு ரஷ்யாவில் இருக்கும் முக்கியமான நகரமான ரஸ்தோவ் ராணுவத் தலைமை இடத்தை எதிர்ப்புகள் ஏதும் இல்லாமல் 'வாக்னர் குரூப்' கூலிப்படையினர் கைப்பற்றுகின்றனர்.

சில மாதங்கள் முன்னர் வரை கூட ரஷ்யாவுக்கும் வாக்னர் குழுவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று புடின் தலையில் அடித்து சத்தியம் செய்துகொண்டிருந்தார் .ரஷ்யாவில் தனியார் படைகளை வைத்திருப்பது சட்டத்திற்கு புறம்பான செயல் . ஆனால் இன்று அப்படியான தனியார் படை ஒன்று ரஷ்யாவுக்கு சவால் விடுவதை உலகம் முழுதும் பார்த்துக்கொண்டிருக்கிறது.

பிரிகோஜின் கதை ஒரு ஹாலிவுட் படத்துக்கான அனைத்து சுவாரசியமும் கொண்டது . பிரிகோஜின் ரஷ்யாவின் செயிண்ட் பீட்டஸ்பர்க் நகரத்தில் 1960 களில் பிறந்தவர் . அவரது இளமை பல குற்றச்செயல்களில் கழிந்தது . வழிப்பறி , வீடு புகுந்து திருடுதல் என்று பலவகை குற்றங்களில் ஈடுபட்டு வந்தார் . இந்தக் குற்றங்களுக்காக 1980 களில் பத்து வருடங்களுக்கு மேல் சிறையில் கழித்தார். சிறையில் இருந்து வெளியே வந்தபின் சிறிய உணவகம் ஒன்றை ஆரம்பித்தார் . பின்னர் அதை விரிவாக்கம் செய்தார்.

இந்தக் காலகட்டத்தில் ரஷ்யாவின் முன்னாள் KGB ஏஜெண்டான புடின் செயிண்ட் பீட்டஸ்பெர்க் நகரத்தின் மேயராக தேர்ந்தெடுக்கப்படுகிறார். இதன் பின்னரே பிரிகோஜினுக்கும் புடினுக்கும் இடையிலான அறிமுகம் உருவாகிறது . புடினுக்கு தேவையாக பல வேலைகளைச் செய்து அவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகிறார். புடினின் சமையல்காரர் என்றே பிரிகோஜின் முதலில் அறியப்பட்டார்.

புடின் ரஷ்ய அதிபரானதும் பிரிகோஜினுக்கு ரஷ்யப் பள்ளிகளுக்கு உணவு தயாரித்து வழங்கும் ஒப்பந்தம் கிடைக்கிறது. அதன் பின் ரஷ்ய ராணுவத்திற்கு உணவு தயாரித்து வழங்கும் வாய்ப்பும் கிடைக்கிறது. இரண்டு ஒப்பந்தமுமே மிகவும் லாபகரமான ஒப்பந்தங்கள்.

இவ்விதம் அவருக்கு கிட்டிய ராணுவத் தொடர்புகள் மூலம் தனியார் ராணுவப் படை ஒன்றை உருவாக்கி அதை ஒரு சேவையாக ரஷ்யாவுக்கு அளிக்க முன்வருகிறார். முன்னாள் ராணுவ வீரர்கள், கிரிமினல்கள் என்று பணத்துக்காகப் போரிடும் யாரையும் தனது படையில் இணைத்துக்கொள்கிறார்.

இந்தக் குழுவின் பெயரான வாக்னர் என்பது ஜெர்மானிய செவ்வியல் இசை மேதை வாக்னரை குறிப்பதாகும் . வாக்னர் ஹிட்லருக்கு மிகவும் விருப்பமான இசையமைப்பாளர், புகழ்பெற்ற போர்ப் படமான 'அப்போகலிப்ஸ் நவ்' படத்தின் போர்க் காட்சிகளின்போது போது பின்னணியில் வாக்னரின் இசைதான் இசைக்கப்படும்.

ரஷ்யா 2014 இல் உக்ரைனின் கிரைமியா பகுதியை தன்னுடன் இணைத்துக்கொண்ட போது அங்கு களத்தில் முன் சென்றவர்கள் வாக்னர் படை வீரர்களே. அதன் பிறகு சிரியா , மாலி , லிபியா என்று பல நாடுகளில் ரஷ்யாவின் சார்பாக அல்லது ரஷ்யாவுக்கு உதவும் வகையில் பல நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபட்டு வந்தனர் .

அமெரிக்காவில் நடந்த 2016 அதிபர் தேர்தலின் போது அதில் தலையிட்டு சமூக ஊடகங்கள் வழியாக பொய்ச்செய்திகளை பரப்பியதில் பிரிகோஜினுக்கு பெரும் பங்கு உண்டு . இப்படி இணையத்தில் டிரோல் செய்வதை ஒரு தொழிற்சாலை போலவே செய்து வந்தார். தேர்தல் தலையீடு தொடர்பாக அமெரிக்காவில் நடந்த விசாரணையின் முடிவில் ஒரு குற்றவாளி என்று இவர் பெயரும் சேர்க்கப்பட்டுள்ளது.

தற்போது நடந்து வரும் உக்ரைன் போரின் போதும் ரஷ்யா சார்பாக கணிசமான வாக்னர் படையினர் கலந்துகொண்டனர். உக்ரைன் போரில் ரஷ்யா இதுவரை ஈட்டிய வெற்றியில் அவர்களுக்கு முக்கியமான பங்கு உண்டு. இப்படி புடினுடைய வலதுகரமாக இருந்த வந்த ஒருவர் திடீரென்று அவருக்கு எதிராகத் திரும்பியது யாரும் எதிர்பார்த்திராத ஒரு நகர்வு.

**தற்போது நடந்து வரும் உக்ரைன் போரின் போதும் ரஷ்யா சார்பாக கணிசமான வாக்னர் படையினர் கலந்துகொண்டனர். உக்ரைன் போரில் ரஷ்யா இதுவரை ஈட்டிய வெற்றியில் அவர்களுக்கு முக்கியமான பங்கு உண்டு. இப்படி புடினுடைய வலதுகரமாக இருந்த வந்த ஒருவர் திடீரென்று அவருக்கு எதிராகத் திரும்பியது யாரும் எதிர்பார்த்திராத ஒரு நகர்வு.**

பிரிகோஜினுக்கும் ரஷ்ய ராணுவத் தலைமைக்கும் சமீப காலமாகவே உரசல்கள் இருந்து வந்தன. வாக்னர் குழுவை சட்டப்படி ராணுவத்தின் பகுதியாக அங்கீகரிக்கவும் அவர்களுக்கு முறையான அதிகாரம் அளிக்கவும் திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. பிரிகோஜின் தனது படையினர் மீது ரஷ்யப் படைகள் தாக்குதல் நிகழ்த்தின, அவர்களுக்கு ரஷ்ய ராணுவம் சரியானபடி ஆயுதங்களை வழங்கவில்லை என்றெல்லாம் சரமாரியாகக் குற்றச்சாட்டுகளை அடுக்கி வந்தார். ஆனால் இது ஒரு உள்நாட்டுக் கலகமாக மாறும் என்பதை யாரும் எதிர்பார்க்கவில்லை.

பிரிகோஜின் தலைமையிலான ஆயுதப்படை தெற்கு ரஷ்யாவின் பெரிய நகரமான ரஸ்தோவ் நகரத்தின் ராணுவத் தலைமையிடத்தை முதலில் கைப்பற்றுகிறார்கள் . பின்னர் அங்கிருந்து தலைநகரான மொஸ்கோவை நோக்கி நகர ஆரம்பித்தார்கள் . இவை அனைத்தும் எந்தவித எதிர்ப்புமே இல்லாமல் நிகழ்ந்தது ,மொஸ்கோவுக்கு 200 கி.மீ. தூரமே இருக்கும் இடத்தில் மேலும் ஒரு எதிர்பாராத திருப்பம்.

புடினின் நண்பரும் பெலரூஸ் நாட்டின் அதிபருமான லுகசென்கோ தலையிட்டு இதை சுமுகமாக முடித்து வைக்கிறார். பிரிகோஜின் தனது கலகத்தை உடனடியாக கைவிட்டு தனது படைகளுடன் திரும்புகிறார். அதற்குப் பின் அவருக்கு பெலரூஸ் நாட்டில் அடைக்கலம் கிடைக்கிறது. பிரிகோஜின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது என்று புடின் உறுதி அளிக்கிறார், எவ்வளவு துரிதமாக இந்த விவகாரம் ஆரம்பித்ததோ அதே வேகத்தில் முடிவுக்கும் வந்துவிடுகிறது.

புடின் கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக ரஷ்யாவை தனது இரும்புக்கரங்கள் கொண்டு ஆண்டு வந்தார். அசைக்க முடியாத அதிகாரம் கொண்டவர் என்று அவரைக் குறித்து ஒரு பிம்பம் பரவலாக இருந்து வந்தது. ஆனால் அவரை எதிர்த்து இப்படி ஒரு கலகம் உருவாகியது பல கேள்விகளை எழுப்பியுள்ளது .

எதை எதிர்பார்த்து இந்த கலகம் ஆரம்பித்தது? , பின் எதை உத்தேசித்து இது முடிவுக்கு வந்தது? , கலகத்தில் ஈடுபட்டோர் ஏன் தண்டிக்கப்படவில்லை ? என்ற பல கேள்விகள் பூதாகரமாக எழுந்து நிற்கின்றன .

முக்கியமாக இதெல்லாம் ரஷ்யாவில் உள்நாட்டு விவகாரம் என்று சர்வதேசச் சமூகம் கடந்து போய்விட முடியாது . அமெரிக்காவுக்கு நிகராக அணு ஆயுதங்களைக் குவித்து வைத்திருக்கும் நாடு ரஷ்யா. புடின் , உக்ரைன் மீது போர் தொடுத்திருப்பது சர்வதேச அரங்கில் பெரும் கண்டனத்தை உருவாக்கி உள்ளது தான். ஆனால் இப்படி ஒரு கலகம் உருவாக்கி புடின் வெளியே தள்ளப்பட்டால் அது ரஷ்யாவின் ஸ்திரத்தன்மையையே பாதிக்கும்.

புடின் போய் அந்த இடத்திற்கு இது போன்ற கூலிப்படை கலகம் மூலம் வேறொருவர் வந்தால் அது பல அரசியல் மற்றும் இராணுவக் குழப்பங்களை உருவாக்கும். பிரிகோஜின் விவகாரம் தற்சமயம் முடிவுக்கு வந்துவிட்டது என்றாலும் அது உருவாக்கிய அதிர்வுகள் பல வகைகளில் புடினுக்கு ஒரு சவாலாகவே அமையும்.

தனது அரசியல் வரலாற்றில் புடின் எதிர்கொண்ட மிகச் சிக்கலான சவால் இதுவாகத்தான் இருக்கும் , இதிலிருந்து வலுவாக மேலே எழுந்து வர புடின் இதுவரை செய்யாத ஒன்றைச் செய்ய வேண்டியிருக்கும், உலகமே அவர் அடுத்து என்ன செய்யப்போகின்றார் என்பதைக் கவனமாகப் பார்த்துக்கொண்டிருக்கிறது. இதை முன்வைத்து உக்ரைன் விவகாரத்தை கைவிட்டுவிட்டு ரஷ்யாவின் ஸ்திரத்தன்மையை கட்டி எழுப்புவதில் புடின் கவனம் செலுத்தினால் அது அனைவருக்குமே நலம் பயப்பதாக இருக்கும்.





# புதுப்பொலிவுடன் 7 ஆவது ஆண்டில் காலடி வைக்கிறது 'எதிரொலி'

போலிகளை அலங்கரித்து, பொய்களுக்கு மகுடம் சூடி, ஊடக அறம் மறந்து, விழுமியங் களையெல்லாம் முழுமையாக துறந்து, 'வால்' பிடித்து, ஆலவட்டம் ஏந்தினால்தான் ஊடக உலகில் 'மாத இதழின்' ஆயுள் நீடிக்கும் என எண்ணிக்கொண்டு 'எதிரொலி'யையும் ஏளன மாக எடைபோட்டவர்களும், எதிரொலிதான் உண்மையின் குரல், நீதியின் ஒ(லி)ளி, எத்தகைய சவால் வந்தாலும் அறம் மாறாது – கொள்கை துறக்காது பயணிக்கும் ஊடகம் என்பதை உளமாற ஏற்றுக்கொண்டுள்ளனர். சமூகத்தின் குரலாக ஓங்கி ஒலித்துக்கொண்டிருப்பதால்தான் ஒட்டு மொத்த சமூகமும் எதிரொலியை ஏற்றுக்கொண் டுள்ளது.

இதுதான் எதிரொலியின் கொள்கைமாறா பயணத்துக்கு வாசகர்கள் சூடியுள்ள வெற்றி மகுடம். இந்த உயரிய அங்கீகாரத்துடன் – வாசகர்களின் பேராதரவுடன் – காலத்துக்கேற்ற அத்தியாவசிய மாற்றங்களுடன் 7 ஆவது ஆண்டில் காலடி வைத்து கம்பீரமாக பயணித்துக்கொண்டிருக்கிறது உங்கள் எதிரொலி.

உலகளாவிய ரீதியில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, மூலப்பொருட்களின் விலையேற்றம், நிதி நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் 300 வருடங்கள் பழமை யான பத்திரிகைகளுக்குகூட மூடு விழா நடத்தப்படுகின்ற தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில், எதிரொலியின் பயணம் தொடர – வெற்றியளிக்க பக்க பலமாக இருக்கும் வாசகர்கள், விளம்பரதாரர்கள், நலன்விரும்பிகள், விநியோகஸ்தர்கள், விற்பனையாளர்களுக்கு முதலில் இரு கரம் கூப்பி நன்றிகளை சமர்ப்பிக் கின்றோம்.

ஊதியம் வழங்கினால்தான் உழைப்பு வழங்கப்படும் என்றில் லாது, பத்திரிகை தரமாக வர வேண்டும், பல்சுவை அம்சங்கள் இடம்பெற வேண்டும், தாங் கள் வலிகளை சுமந்தாலும் வெளி யீடு என்பது சுகப்பிரவசமாக இருக்க வேண்டும் என்ற எண் ணத்துடன் எம்மோடு 6 வருடங்களாக பயணித்துக் கொண்டிருக்கும் ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், பக்கவடிவமைப்பாளர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களுக்கும் அன்புகலந்த நன்றிகள்.

அதேபோல 'எதிரொலி' குறித்து போலி பரப்புரைகளை முன்னெடுத்து – ஏன் துரோகி முத்திரைக்கூட குத்தி – அதன் பயணத்தை தடுப்ப தற்காக இன்றளவிலும் பாடுபட்டுக்கொண் டிருப்பவர்களும் நன்றிகூற வேண்டும். ஏனெனில் அவர்களால்தான் 100 வீதம் அல்ல 1000 வீதம் விழிப்பாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் – அக்கறை எம்முள் ஏற்படுகின்றது.

தமிழ் மாத இதழொன்று ஆஸ்திரேலியாவில் ஆறு வருடங்கள் – அதுவும் ஊழல், மோசடிகளை எல்லாம் அம்பலப்படுத்திக்கொண்டு உண்மையின் வழியில் பயணிப்பது அவ்வளவு எளிதான விடயம் அல்ல. அது அக்கினிப்பரீட்சை என்றே கூற வேண்டும். அந்த சவாலை ஏற்று செயற்படும் எமது நிர்வாக இயக்குநரையும் பாராட்டியே ஆகவேண்டும்.

சமூக நீதிக்காக குரல் கொடுக்க வேண்டும், உண்மையின் பக்கம் நிக்க வேண்டும் என்பதே எமது பிரதான எதிர்பார்ப்பு. ஆஸ்திரேலியாவில் வாழும் அகதிகளுக்கு இழைக்கப்படும் அநீதிகளை பல தடவைகள் சுட்டிக்காட்டி, ஓரிருவருக்காவது தீர்வு கிடைக்க கடுகளவேனும் பங்களிப்பை வழங்கியுள்ளோம். கடந்த 6 ஆண்டுகளுக்குள் எதிரொலி ஊடாக நாம் ஏற்றிய சமூக பணி – பங்களிப்பு ஏராளம். இனியும் எமது பணி – பங்களிப்பு தொடரும்.

ஈழத்து பிரச்சினை உள்ளிட்ட முக்கிய விடயங்களை ஆஸ்திரேலிய மக்கள் மற்றும் சர்வதேசத்துக்கு எடுத்து செல்வதற்காக 7 ஆவது ஆண்டில் ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளோம். எமது பத்திரிகையில் ஒரிரு பக்கங்களில் ஆங்கில மொழியிலும் ஆக்கங்கள் வெளிவரும் என்பதை அறியத்தருகின்றோம். வாசகர்களால் கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்ட சில கோரிக்கைகளும் ஏற்கப்பட்டு, அதற்கேற்ற வகையிலும் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

இன்று போலவே என்றும் வாசகர்கள், விளம்பர தாரர்கள், விநியோகஸ்தர்கள், விற்பனையாளர்கள் உள்ளிட்டோரின் பேராதரவும், பேரன்பும் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் பயணத்தை இனிதே தொடர்கின்றோம்.

**ஆசிரியர்**
**எதிரொலி - ஆஸ்திரேலியா**



# மனிதப் புதைகுழிகளிலான தேசம்

உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச அமைப்பு அண்மையில் இலங்கை தொடர்பில் வெளியிட்ட அறிக்கையானது தமிழர் விடயத்தில் மிக முக்கியமானது. “இலங்கையின் பாரிய மனிதப் புதை-குழிகளும் முற்றுப்பெறாத அகழ்வுப் பணிகளும்” என்ற தலைப்பிலான இவ்வறிக்கையில் இந்நாடு சுதந்திரமடைந்த பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் எழுத்தாவணமாகவும், காணொலியாகவும் இது வெளியிட்டு வைப்பட்டமை, இந்நாட்டில் இழைக்கப்பட்ட மனிதவுரிமைகள் விடயங்களை மீளவும் பேசுபொருளாக்கியிருக்கின்றது. அனேக சர்வதேச ஊடகங்களின் கவனத்தை ஈர்த்திருக்கின்றது.

இந்நாட்டின் குரூர பக்கங்களின் சாட்சியாக இன்னமும் இருப்பது மனிதக் கடத்தல்கள்தான். அரச பயங்கரவாதத்திற்கு எதிராகக் குரல்கொடுத்த - செயற்பட்ட இளைஞர் யுவதிகள், சிவில் சமூகச் செயற்பாட்டாளார்கள், ஊடகவியலாளர்கள், மனிதவுரிமைச் செயற்பாட்டாளர்கள், போராட்ட அமைப்புக்களின் உறுப்பினர்கள், அப்போராட்டங்களுக்கு உதவியவர்கள், சிங்கள அரசியல்வாதிகளின் எதிரிகள், சரணடைந்தவர்கள், இராணுவத்திடம் பெற்றோரால் கையளிக்கப்பட்டவர்கள் என பல வகையானவர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டிருக்கின்றனர். இராணுவம், பொலிஸார், புலனாய்வாளர்கள், இனந்தெரியாத ஆயுததாரிகள், வெள்ளைவான்காரர்கள் என கடத்தல்காரர்களின் பட்டியலும் மிக நீளமானது.

இலங்கையின் வரலாற்றில் மேற்கண்ட தரப்பினரால் முதன்முதலில் கடத்தப்பட்டவர் யார், எப்போது கடத்தப்பட்டார், கடத்தப்பட்டவருக்கு என்ன ஆனது போன்ற கேள்விகளுக்கு எப்போதும், யாரிடமும் பதில் இருப்பதில்லை. குறைந்தபட்சம் ஆட்களைக் கடத்துவது, கொலைசெய்வது மனித குலத்திற்கு எதிரான பாரிய குற்றங்களில் ஒன்று என்பதைக்கூட இவர்கள் அறிந்திருப்பதில்லை. முறைப்படியான விசாரணைகள் நடத்தப்படுவதில்லை. அதனால்தான் கடத்தப்பட்டவர்கள் விடயத்தில் எவ்வித பொறுப்புக்கூறலையும் அரசு வெளிப்படுத்துவதில்லை. அதற்கு உதாரணமாக பல புதைகுழிகள் இலங்கை முழுவதிலும் பேச்சற்றுக் கிடக்கின்றன.

இவ்வாறு கடத்தப்படுபவர்களுக்கு என்ன நடக்கிறது என்பதற்கான சான்றுகள் நாடு முழுவதும் கிடைத்திருக்கின்றன. கிடைத்துவருகின்றன. கடத்தப்படுபவர்கள் அயலில் இருக்கும் இராணுவ முகாமிற்கோ, கடற்படைத் தளத்திற்கோ, பொலிஸ் நிலையத்திற்கோ அழைத்துச் செல்லப்பட்டமையும், அங்கு மனித குலமே வெட்கித் தலைகுனியும்படிக்கு காட்டுமிராண்டித்தனமான சித்திரவதைகள் இடம்பெற்றிருப்பதும் கடந்த காலங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. கடத்தப்படுபவர்களை அடைத்து வைத்து சித்திரவதை செய்வதற்காகத் தயார் செய்யப்பட்ட கட்டடத் தொகுதியொன்று திருகோணமலையில் கண்டுபிடிக்கப்பட்டு, அது தொடர்பான அறிக்கையும்கூட வெளியிடப்பட்டிருந்தது.

இலங்கையில் சித்திரவதையின்போதோ, அல்லது சித்திரவதையின் பின்போ அனேகர் இறந்துபோகின்றனர் என்பதற்கு கடந்த மாதத்தில்கூட ஒரு சம்பவம் நிகழ்ந்திருந்தது. மலையகத்தை சேர்ந்த 3 பிள்ளைகளின் தாயான ராஜகுமாரி வீட்டு வேலைக்காக கொழும்புக்கு வந்திருந்தார். அவரின் எஜமானி தன்னுடைய நகைகளை ராஜகுமாரி திருடிவிட்டார் எனச் சந்தேகித்து பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கமைய அவர் கைதுசெய்யப்பட்டார். கைதுக்குப் பின்னர் இறந்துபோனார். ராஜகுமாரியின் இறப்பிற்குப் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற சித்திரவதைதான் காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறு அப்பாவி தமிழ் பெண்ணை சித்திரவதை செய்து கொன்ற பொலிஸாருக்கு கிடைத்த உச்சபட்ச தண்டனை இடமாற்றம் மட்டும்தான்.

இதுபோன்றுதான் கடந்த காலங்களிலும் சித்திரவதைகளுக்குப் பின்னரான கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இலங்கையின் ஆக முந்தைய சித்திரவதைகளுக்குப் பின்னர் கொல்லப்பட்டவர்களின் பாரிய மனிதப் புதைகுழியாக மாத்தளை மருத்துவமனைப் புதைகுழி காணப்படுகின்றது. இலங்கையின் ஏக அதிகாரமுடைய சிங்கள தேசிய அரசுக்கு எதிராக கிளர்ந்தெழுந்த இளைஞர்களைக் கைதுசெய்த இராணுவம் வகைதொகையின்றிக் கொன்றொழித்தது. கைதுசெய்த பலரை கண்களைப் பிடுங்கியும், உடல் உறுப்புக்களை அறுத்தெறிந்தும், வீதிகளில் நிர்வாணமாகக் கட்டி இழுத்தும் ஆரவாரித்தது சிங்கள இராணுவம். தன் சொந்த சகோதரர்களையே கொன்று குவித்து ஆராவாரித்துக் கொண்டாடிய ஒரே இனம் என்கிற பெருமிதத்தைப் பெற்றுக்கொண்டனர். அவ்வாறு கொன்றவர்களைப் புதைத்த இடமே மாத்தளை வைத்தியசாலைப் புதைகுழி என்கிற சந்தேகத்தைப் பலரும் வெளியிட்டுள்ளனர். இடைநடுவே நிறுத்தப்பட்ட இந்தப் புதைகுழி அகழ்வுப் பணிகளில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் குறித்து முறைப்படியான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் இவை ஜே.வி.பி. புரட்சி காலத்தில் கோத்தபாய தலைமையில் மாத்தளையில் செயற்பட்ட இராணுவத்தினர் வகைதொகையின்றி கைதுசெய்த சிங்கள இளைஞர்களின் உடலங்களே என்கிற சந்தேகத்தையும் செயற்பாட்டாளர்கள் வெளியிட்டுள்ளனர்.

இதற்கு அடுத்து இலங்கையில் அகழப்பட்ட பாரிய மனிதப் புதைகுழியாக யாழ்ப்பாணத்தின் செம்மணி காணப்படுகின்றது. தற்போதைய மனித உரிமைகள் செயற்பாட்டாளரும், முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிக்கா பண்டாரநாயக்கா 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற பாரிய படை நடவடிக்கையை மேற்கொண்டார். அப்படை நடவடிக்கையின் பின்னர் யாழ்ப்பாணம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் சென்றது. இக்காலப் பகுதியில் அதிகளவான தமிழ் இளைஞர்களை இராணுவம் கைதுசெய்தும், கடத்தியும் காணாமலாக்கியது. இவ்வாறு கடத்தப்பட்டவர்களை, கைதுசெய்யப்பட்டவர்களை அவர்தம் உறவுகள் தேடியலைந்துகொண்டிருந்தபோது, கிருசாந்தி படுகொலை வழக்கு புதிய திருப்பம் ஒன்றை ஏற்படுத்தியது. யாழ்ப்பாணத்தின் வரவேற்பு பகுதியான செம்மணி வெளியில் இவ்வாறு கடத்தப்பட்ட 600 இற்கும் மேற்பட்டவர்கள் கொன்று புதைக்கப்பட்டுவிட்டனர் என்ற செய்தியை கிருசாந்தி படுகொலை தந்தது. அதன் பின்னர் சர்வதேச மனித உரிமைகள் நிறுவனங்களின் கண்காணிப்புடன் நடத்தப்பட்ட அகழ்வாய்வும், காலநிலையை காரணம்காட்டி இடைநடுவே நின்றுபோனது.

2017 ஆம் ஆண்டில் மன்னார் நகர் பகுதியில் சதொச கட்டட அமைப்புக்காக அகழப்பட்ட குழியிலிருந்து பல மனித எச்சங்கள் அகழப்பட்டன. குடும்பம் குடும்பமாக கொன்று புதைக்கப்பட்டமைக்கான சான்றுகளாக இருக்கும் அவற்றை தொல்லியல் திணைக்களம் பொறுப்பெடுத்து ஆய்வுகளை மேற்கொண்டது. முன்னர் இராணுவ சோதனைச் சாவடி, முகாம் பகுதியாகவும், போர்க்காலத்தில் பெருமளவிலான மக்கள் இந்தப் பகுதியினூடாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்தமைக்குமான சான்றுகள் இருக்கின்ற போதிலும், அதுவொரு பொது மயானம் எனவும், அங்கு புதைக்கப்பட்ட சடலங்கள் இந்து- கிறிஸ்தவ மோதல்களினால் கொலைசெய்யப்பட்டவர்களுடையவை என்ற முடிவோடு அந்தப் புதைகுழி விவகாரம் முடித்துவைக்கப்பட்டது.

இதற்குப் பின்னர் அல்லைப்பிட்டி, அரியாலை, திருக்கேதீஸ்வரம், பளை, முகமாலை எனப் பல இடங்களில் மனித எலும்புக்கூடுகள் தனித்தனியாகவும், கூட்டாகவும் மீட்கப்பட்டுள்ளன. இக்கட்டுரை எழுதப்படும் தருணத்தில்கூட முல்லைத்தீவின் கொக்குத்தொடுவாய் பகுதியில் நீர்வழங்கல் வடிகாலமைப்புத் தேவைக்காக மேற்கொள்ளப்பட்ட அகழ்வில் பெருமளவிலான மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. இராணுவத்திடம் சரணடைந்த விடுதலைப் புலி-களைக் கொலைசெய்து புதைத்திருக்கலாம் எனச் சந்தேகம் தரும் இந்தப் புதைகுழியானது இன்னமும் முழுமையான அகழ்வு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. இலங்கையில் மனித புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படுவது மிகச் சாதாரண-மானதாக மாறிவிட்ட இன்றைய நிலையில் இது குறித்து யாரும் அலட்டிக்கொள்வதில்லை. இந்த மனித புதைகுழிகள் உருவாக்கத்தின் பின்னால் இருக்கும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் பேசப்படுவதில்லை. மனிதர்களைக் கடத்தி சித்திரவதைக்குட்படுத்திக் கொன்று கூட்டம்கூட்டமாக புதைக்கும் மனிதகுல விரோத நடவடிக்கையை இந்தப் புத்தனின் தேசம் சர்வசாதாரணமாக எடுத்துக்கொள்ளப் பழகிவிட்டது. இவ்வாறு பழக்கப்பட்டமைக்கும், இத்தவறுகள் மீள மீள இடம்பெறுவதற்கும் ஒரே காரணம்தான் இருக்கிறது.

அந்தக் காரணமானது, இங்கு மனித குல விரோதிகள் தண்டிக்கப்படுவதில்லை. மாறாக தேசிய வீரர்களாகக் கொண்டாடப்படுகின்றமைதான். உதாரணத்திற்கு மிருசுவில் பகுதியில் காணி பார்க்க சென்றவர்களைக் கொன்று புதைத்த இராணுவ சிப்பாய் எவ்வித தண்டனையுமின்றி விடுவிக்கப்பட்டமையையும், அவருக்கு சிங்கள சமூகத்தினர் அளித்த ஆதரவினையும் குறிப்பிடலாம். எல்லாவற்றையும் விட சிங்கள மக்களின் 69 லட்சம் வாக்குகளைப் பெற்று ஜனாதி-பதியாகத் தெரிவான கோத்தபாய கூட இந்த மனிதப் புதைகுழிகளோடு தொடர்புபட்டவர்தான். எனவே இந்நாட்டின் தேசிய வீரனாவதற்குரிய முதல்தகுதியானது அவர் எத்தனை மனிதப் புதைகுழிகளை உருவாக்கினார் என்பதிலிருந்தே கணிப்பிடப்படுகின்றது. எனவேதான் இத்தீவு முழுவதும் முறையாக அகழப்படாத பாரிய மனிதப் புதைகுழிகள் பல உருவாகிக்கொண்டிருக்கின்றன.

# Sai Shree Foods
Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

# இதயம் கவர்ந்த கள்வன்

நச்சினார்க்கினியன்

அதிகாரம் ஊழல் செய்யவே முனையும், முழுமை யான அதிகாரமோ முற்றிலும் ஊழலில் திளைக்கும்."

- ஜான் டல்பெர்க் - ஆக்டன்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. அது 2001 வருடம் ஜூன் மாதம் "ஐயோ என்னைக் கொல்லப் பாக்குறாங்க " என்ற மாபெரும் கைது நாடகச் சம்பவம் நடந்தேறியது. இது 2023 வருடம் ஜூன் மாதம் ,அதே போன்று ஊழல் குற்றச்சாட்டிற்காக கைது சம்பவம். இப்பொழுதோ நெஞ்சைப் பிடித்துக்கொண்டு கண்களை மறைத்து "நெஞ்சு வலிக்குதே" என்ற மற்றுமொரு நாடகமும் பார்வையாளர்களின் பெருத்த வரவேற்பிற்கிடையே மிக நன்றாக நடந்தேறியது.முன்னவர் நம் தமிழைக் காக்க வந்த தமிழினக்காவலர் . பின்னவர் இந்நாள் அமைச்சர் ( தற்பொழுது இலாகா இல்லாத). 22 வருடங்கள் கடந்தாலும், அரசாங்கங்கள் மாறினாலும் ஊழல்பேர்வழிகளும், நாடகங்களும் மாறவில்லை.



இந்தக் கைதுச் சம்பவத்திற்கு பிறகு தொடர்ந்த ஊடக இரைச்சல்கள் ,கழகக் கண்மணிகளின் ஒன்றியச் சவால்கள் மற்றும் சங்கிகளின் தொடர்ந்த ஊழலுக்கு எதிரான போர்முழக்கங்கள் எல்லாம் ஒருவாறு ஓய்ந்தபிறகு இந்தச் சம்பவத்தை பற்றியும் ,அது தொடர்பான காரண காரியங்கள் மற்றும் விளைவுகளும் என்னவாக இருக்கலாம் என்பது பற்றி நடுநிலையாக ( அல்லது சமன் நிலையில்) எழுதவேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

இந்த கைதுச் சம்பவத்தைப் பற்றி எழுதுவதற்கு முன் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி கடந்து வந்த பாதை குறித்தும் , இந்த வழக்கினைப் பற்றியும் கொஞ்சம் சுருக்கமாக பார்க்கலாம்.

தமிழ்நாட்டின் கரூரில் பிறந்த செந்தில்பாலாஜி 1995ஆம் ஆண்டு தி.மு. க. வில் சேர்ந்தார் ( பட்டப்படிப்பை முடிக்கவில்லை. ஒருவேளை கழகத்தில் சேர்வதற்கு எந்தப் படிப்பும் தேவையில்லை என்று நினைத்திருக்கலாம்). ஐந்து வருடங்கள் ஓயாமல் பொதுச்சேவை ( ?) செய்த பிறகு, தனக்கு எந்த ஆதாயமும் கிடைக்காது என்று தெரிந்த பிறகு 2000 ஆம் ஆண்டு அ.தி.மு.கழகத்தில் இணைகிறார். ( இந்த இரண்டு கழகங்களுக்கும் என்ன வேறுபாடு என்று நீங்கள் கேட்கலாம். முன்னது குடும்பச் சொத்து. அவ்வளவு மட்டுமே ) பின்னர் குறுகிய காலத்தில் படிப்படியாக முன்னேறி, அதிமுக ஆட்சிக்காலத்தில் போக்குவரத்து துறை அமைச்சராகிறார். இதன் பிறகு அமைச்சர் பொறுப்பிலிருந்தும், கரூர் மாவட்ட அதிமுக செயலர் பொறுப்பிலிருந்தும் 2015 இல் நீக்கம் செய்யப்படுகிறார் . முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர் ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலையில் டி. டி. வி. தினகரன் ஆதரவாளராக இருந்து எந்தப் பலனும் கிடைக்காத நிலையில் 2018 ல் மறுபடியும் திமுகவில் ( தி.மு.க -, அ. தி.மு.க -, அ.ம.மு.க -, தி.மு.க ) இணைகிறார். வாழ்க்கை என்பது ஒரு சுழற்சி என்பதை நாம் இதன்மூலம் அறிந்துகொள்ள முடியும் . பிறகு நடந்த தேர்தலில் வெற்றிபெற்று, திமுக அமைச்சரவையில் மின்சாரம், கலால் மற்றும் ஆயத்தீர்வை அமைச்சராக பொறுப்பேற்றார்.

இம்சை அரசன் 23-ஆம் புலிகேசி திரைப்படத்தில், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இருவர் அக்காமாலா, கப்சி குளிர்பானம் தயாரிப்புப் பற்றிய திட்டத்தை அரசரிடம் (வடிவேலு ) விளக்கிக் கொண்டிருப்பார்கள். அரசன் அவர்களை இடைமறித்து, "அது கிடக்கட்டும் இதில் எனக்கு எவ்வளவு கமிசன் கிடைக்கும்?" என்று கேட்பான். இயக்குனர் சிம்புதேவன் மிக சாதுர்யமாக எல்லா அரசியல்வாதிகளையும் நக்கல் செய்திருப்பார்.நகைச்சுவை நடிகர் வடிவேலுவின் கதாபாத்திரத்தில் எல்லா அரசியல்வியாதிகளையும் இட்டு நிரப்பிக்கொள்ளுங்கள். கமிஷன் / லஞ்சம் வாங்குவது என்பது எங்கள் தார்மீக உரிமை என்று எப்போதும் கருதிய அமைச்சர் அவர்கள், தான் போக்குவரத்து துறை அமைச்சராக இருந்த காலத்தில் ,அரசு வேலை வாங்கித் தருவதாக இடைத்தரகர்கள் மூலம் கையூட்டு பெற்றுக் கொண்டு பணிக்கு ஆட்களை சேர்த்தார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இதில் கையூட்டு கொடுத்தும் வேலை கிடைக்காதவர்கள் எழுப்பிய புகார்களின் அடிப்படையில் செந்தில் பாலாஜி அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டார். 2015 ஆம் ஆண்டு காவல்துறை தயாரித்த குற்றப்பத்திரிகையில் இவர் பெயரில்லை. பிறகு பணம் கொடுத்தும் வேலை கிடைக்காதவர்கள் அளித்த குற்றமனுவின்படி பல்வேறு இழுபறிகளுக்கிடையே, இறுதியாக 2021ல் காவல் துறையினர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த குற்றப் பத்திரிகையில் ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் அமைச்சர் செந்தில் பாலாஜி உள்ளிட்ட 47 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இந்நிலையில் 2021ல் பதவியேற்ற தி.மு.க .அரசு அமைச்சரவையில் ஏற்கனவே குற்றம் சாட்டப்பட்ட செந்தில்பாலாஜி மறுபடியும் அமைச்சர் ஆகிறார். இரண்டே மாதங்களில் வழக்கில் தொடர்புடையவர்கள் சமரசம் செய்து கொண்டதால் சென்னை உயர் நீதிமன்றம் இவ்வழக்கைத் தள்ளுபடி செய்து ஜூலை 2021ல் தீர்ப்பு வழங்கியது. இந்த மாதிரி கண்டிப்பாக நடக்கும் என்று முன்கூட்டியே கணித்த அமலாக்க இயக்குனரகம் இந்தத்தீர்ப்பு வெளியாவதற்கு ஒரு நாள் முன்னரே , சட்டவிரோத பண ப்பரிமாற்றத் தடை சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்கிறது. பல்வேறு காலதாமத இழுபறிகளுக்குக்கிடையே இந்திய உச்ச நீதிமன்றம் தலையிட்டு ,அமலாக்க துறைக்கு விசாரணை அளிக்க ஒப்புதல் அளித்து உத்தரவிடுகிறது. அமலாக்க அதிகாரிகள் பல்வேறு சோதனைகளுக்கு பிறகு பல்வேறு ஆவணங்களைக் கைப்பற்றிய பிறகு ,செந்தில் பாலாஜியைக் கைது செய்கையில் இதய வலியால் அவதியுறுவதாகஅவர் கூறியதால் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு மருத்துவமனையில் நலம் தேறிவருகிறார் . இதன்பிறகு தமிழக முதலமைச்சர் செந்தில்பாலாஜி துறைபொறுப்பற்ற (?) அமைச்சராக தொடர்வார் என அறிவித்ததன் தொடர்ச்சியாக தமிழக ஆளுநர் அவரை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கி ஆணை பிறப்பித்து பதவியைத் திரும்பப் பெற்றிருக்கிறார். தமிழக முதலமைச்சர் ஆளுநரின் செயலை சட்டப்படி எதிர்கொள்வதாகத் தெரிவித்திருக்கிறார் .

இதையொட்டி தமிழ்நாட்டில் எப்பொழுதும் போல எல்லாப் பக்கமும் கூச்சல் ,குழப்பங்கள் தொடர்ந்தன. முதல்வர் ஸ்டாலின் அவர்கள் ,"வழக்கிற்குத் தேவையான சட்ட நடைமுறைகளை மீறி மனிதநேயமற்ற முறையில் அமலாக்கத்துறை அதிகாரிகள் நடந்து கொண்டிருப்பது தேவையா? பா.ஜ.க.வின் இந்த மிரட்டல்களுக்கு எல்லாம் தி.மு.க. அஞ்சாது. 2024 தேர்தலில் மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்." என்று சூளுரைத்தார்.இதே முதல்வர்தான் 2016 தேர்தலில் செந்தில் பாலாஜி குறித்து வண்டிவண்டியாக ஊழல் குற்றம் சாட்டினார். ( அது வேற வாய் ) . இந்தக் கைது அப்பட்டமான அதிகார அத்துமீறல் என காங்கிரஸ் ,தி.மு.க ,கம்யூனிஸ்ட் ,நாம் தமிழர் சீமான் மற்றும் அனைத்து கூட்டணி கட்சி தலைவர்களும் கண்டித்திருக்கின்றனர் . அ.தி.மு.க இந்த விஷயத்தில் மிகவும் அடக்கியே வாசிக்கிறது. குற்றம் சாட்டப்பட்டவர் அவர்களின் எதிரணி ,குற்றம் நடந்ததோ செந்தில் பாலாஜி அ.தி.மு.க.அணியில் அமைச்சராக இருந்தபொழுது. மத்தியில் ஆளும் பா.ஜ.க வின் அனைத்து எதிர்க்கட்சி தலைவர்களும் அவர்களின் அனைத்து ஊழல்களைப் பற்றியும் ( ரபேல் போர் விமானம், அதானியின் வேதாந்த நிறுவனப் பங்கு மோசடி மற்றும் அவர்கள் ஆளும் மாநிலங்களில் நடந்த ஊழல்கள்) அவர்களின் அதிகாரத் துஷ்பிரயோகத்தை பற்றியும் பேசுகிறார்களே ஒழிய செந்தில் பாலாஜியின் ஊழல் குற்றச்சாட்டிற்கு எதிராக ஒரு சொல் இல்லை. இடதுசாரிகளும் ஊழலை விட மதவாதமே பெரிது என்ற முடிவுக்கு எப்போதோ வந்துவிட்டதால் அவர்களிடமும் அரசியல் சரிநிலையை எதிர்பார்க்கமுடியாது.

ஆளும் மத்திய அரசும் இவ்வளவு நாள் ( அதாவது 2016 - 2021 ஆண்டு காலத்தில் ) நடவடிக்கை எடுக்காமல் இப்போது ஏன் துரிதமாக நடவடிக்கை எடுக்கிறது? . தமிழ்நாட்டு அரசும் ஏன் வழக்கினை நீதிமன்றத்தில் சந்திக்காமல் அமைச்சரை பாதுகாக்க பகீரதப்பிரயத்தனம் செய்கிறது ? குற்றம் சாட்டப்பட்டவர் விசாரணையில் இருக்கும்போது ஏன் துறையற்ற மந்திரியாக தொடரவேண்டும் ? செந்தில் பாலாஜி கைதினை தொடர்ந்து அண்ணாமலையும் , பா.ஜ.க வும் ஆடப்போகும் சதுரங்க விளையாட்டின் அடுத்த நகர்த்தல் என்ன ? திரைமறைவில் நடக்கும் அதிகார / அரசியல் பேரங்கள் என்னென்ன நமக்கு தெரிய வருமா? யாமறியேன், யாமறியேன் பராபரமே.

எழுத்தாளர் சுஜாதா இருபது வருடங்களுக்கு முன்பு இந்திய அரசியல் பற்றி எழுதியது . இது இன்றும் மாறாமல் பொருந்துகிறது. " வேறு தேர்ந்தெடுப்பு இல்லாத அஜனநாயக சூழ்நிலை. மாறி மாறி பழைய ஊழல்காரர்களையே மீண்டும் பதவிக்குக் கொண்டுவரும் ஞாபகமறதி சார்ந்த அரசியல், மற்றவற்றையாவது ஓரளவுக்கு மாற்றமுடியும் என்று தோன்றுகிறது. இந்த நந்தி விலகவே இல்லை." இந்த நந்தி விலகவில்லை , என்றும் விலகப்போவதில்லை. மக்களும் பயபக்தியோடு கும்பிட்டு, விலகிச் செல்லவும் பழகிவிட்டனர் என்றுதான் சொல்லவேண்டும்.

MCN Cakes

# Sri Lankan Cakes, Sweets & Short Eats in Dandenong Plaza

Cakes | Cupcakes | Macarons | Finger Foods

**Ethiroli Special Offer**
**$10 OFF**
Spend over $100
*valid till 30/06/23. Must bring coupon.

**Custom Cakes**
- Birthday Cakes
- Wedding Cake Structures
- Wedding Cake Pieces

**Authentic Sri Lankan**
- Ribbon Cake
- Chocolate Cake
- Eclairs
- Butter Cake

**Sweets**
- Cupcakes
- Cookies
- Macarons and more....










**MCN Cakes,**
**Level 1 - Food court (near Westpac)**
**Dandenong Plaza**
(03) 90188188
0433662477
www.mcncakes.com.au

## Saturday Lunch Special
## Lamprais

**Dine-in or Takeaway**

***Lunch Everyday Rice & Curry**





Pan Rolls, Buns,
Kottu, Rice ...
Faluda, Tea, Coffee ...
Necto, Ginger Beer ...

**எங்கட கடை டன்டிநொங் பிளாஸாவில்**







# நிரூபிப்பாரா ரணில்?

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்று இந்த மாதத்துடன் ஒரு வருடம் முடிவடைகின்றது. தனது 46 ஆண்டுகால நாடாளுமன்ற அரசியல் பயணத்தில் இந்தக்காலக்கட்டமே அவருக்கு அக்கினிப்பரீட்சையாகும். இதில் அவர் வென்றுவிட்டால் இலங்கை வரலாற்றில் அவருக்கு நிச்சயம் முக்கியமான இடமுண்டு. அதற்காகவே அவர் போராடிவருகின்றார். ஆனாலும் தென்னிலங்கை அரசியலும், பேரினவாத சக்திகளும், உலக அரசியலும் அதற்கு வழிவிடுமா என்பதே மில்லியன் டொலர் பெறுமதியான கேள்வியாகும்.

இலங்கை பொருளாதார ரீதியில் முன்னேற வேண்டுமெனில் - அதாவது ரணில் விக்கிரமசிங்கவின் மொழியிலேயே கூறுவதாயின் '2048' இல் இலங்கை அபிவிருத்தி அடைந்த நாடாக மாற வேண்டுமெனில் முதலில் இனப்பிரச்சினைக்கு நீடித்து நிலைக்கக்கூடிய அரசியல் தீர்வொன்று காணப்பட வேண்டும். இனப்பிரச்சினைக்கு தீர்வு காணாவிட்டால் தலைகீழாக நின்றாலும் முன்னோக்கி செல்ல முடியாது என்பது வெள்ளிடை மலை.

'குள்ளநரி' அரசியல்வாதியாகக்கருதப்படுகின்றரணில் விக்கிரமசிங்கவுக்கு இது நன்கு தெரியும் - புரியும். அதனால்தான் தமிழ்க் கட்சிகளை அழைத்து இப்போது பேச்சுகளை நடத்திவருகின்றார். ஒற்றை ஆட்சிக்குள் அரசியல் தீர்வைக் காண்பதில் ரணில் உறுதியாக இருக்கின்றார். அதாவது 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த அவர் தயார் என்றபோதிலும், பொலிஸ், காணி அதிகாரம் தொடர்பில் தெளிவான நிலைப்பாடு இல்லை.

'சமஷ்டி' கட்டமைப்புக்கு பேரினவாத சக்திகள் அவருக்கு இடமளிக்காது. அந்த முயற்சியில் இறங்கினால் நாடாளுமன்றத்தின் ஆதரவையும் இழக்க வேண்டிய நிலை ரணிலுக்கு ஏற்படும். சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் உள்ள சரத்துகளை அமுல்படுத்துகையில், அன்று சமாதான உடன்படிக்கைமூலம் புலிகளுக்கு நாட்டைக் காட்டிக்கொடுத்தவர் இன்று ஐ.எம்.எப். ஒப்பந்தம் ஊடாக நாட்டைக் காட்டிக்கொடுத்துவிட்டார் என கூவித்திரியும் இனவாதிகள், அவ்வளவு எளிதில் தமிழர்களுக்கு தீர்வை வழங்கிவிட வழிவிடுவார்களா என்ன?

என்னதான் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புகளைச் செய்தாலும், திட்டங்களை வகுத்தாலும் இனப்பிரச்சினையைத் தீர்க்காவிடின் இலங்கையால் இலக்கை அடைய முடியாது என்பதே அரசியல் ஆய்வாளர்களின் கருத்தாகும்.

நாட்டின் நலன்கருதி முக்கியமான முடிவுகளை எடுப்பதாக மார்தட்டிக்கொள்ளும் ரணில் விக்கிரமசிங்க, அரசியல் தீர்வை முன்வைத்து, தான் நேர்மையானவர் என்பதை நிரூபிக்க வேண்டும். அதற்காக தனது நிறைவேற்று அதிகாரத்தைக்கூடப் பயன்படுத்தலாமே.



# மறுமலர்ச்சி என்னும் எட்டாக்கனி

இன்றைய 21 ஆம் நூற்றாண்டிலும் மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நவீன அடிமைகளாகவே நடத்தப்படுகின்றனர் என்பதற்கு அவர்கள் இன்னமும் நில உரிமையற்றவர்களாக வாழ்வதே சிறந்த சான்றாகும்.

ஒரு தனிநபரோ அல்லது சமூகமோ தலை நிமிர்ந்து வாழ வேண்டுமெனில் நில உரிமையென்பது அத்தியாவசியமாகும். அந்த உரிமை கிடைக்கப்பெற்றால் மாத்திரமே நிச்சயம் அடுத்தக்கட்டம் நோக்கி நகர முடியும்.

மலையகத் தமிழர்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் மலையக மாற்றம், மறுமலர்ச்சி பற்றி இன்றளவிலும் பேச்சுகள் அடிபடுகின்றன. லயன் யுகத்துக்கு முடிவுகட்ட வேண்டும் என்ற கோஷங்களும் எழுப்பப்படுகின்றன.

மேற்கூறப்பட்ட விடயங்களை அடைய வேண்டுமெனில் முதலில் நில உரிமை கிடைக்கப்பெற வேண்டும். அரசுதான் வீடுகளை அமைத்துதர வேண்டும் என காத்திருந்தால் அடுத்த நூற்றாண்டிலும் லயன் பற்றி பேசிக்கொண்டிருக்க வேண்டிய நிலையே ஏற்படும்.

எனவே, மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமையை வழங்கினால் அந்தமக்களில் 50 வீதமானோரால் நிச்சயம் தமக்கான தனியான இருப்பிடத்தை நிர்ணயித்துக்கொள்ள முடியும். ஏனையவர்களுக்கு அரசு, சலுகைக் கடன்களை வழங்கலாம். நிதியமொன்றை அமைத்தால் உதவிகளை வழங்குவதற்கு ஏராளமானோர் காத்திருக்கின்றனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி உரிமை வழங்க பிரதான இரு கட்சிகளும் தேர்தல் விஞ்ஞாபனங்களில் உறுதியளித்தன. அதற்கு மக்களின் ஆணையும் கிட்டியது. எனவே, காணி உரிமையை மக்கள் பேசுபொருளாக மாற்ற வேண்டும். அதனை வலியுறுத்தியதாக போராட்டங்கள் இடம்பெற வேண்டும். விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட வேண்டும். அவ்வாறு இல்லாமல் வெறுமனே 'மாற்றம்', 'மறுமலர்ச்சி' என கொக்கரித்துக்கொண்டிருந்தால் விடியல் என்பது முடிவற்ற கனவாக நீளுமே தவிர வேறெதுவும் நடக்காது.

அதேபோல மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள பயிரிடப்படாத நிலங்களும் அம்மக்களுக்கே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அதற்கான இணக்கப்பாடுகள்கூட எட்டப்பட்டுள்ளன. இதனை முதலில் வெல்ல வேண்டும். அதன்பின்னர் பெருந்தோட்டங்களை தோட்டத் தொழிலாளர்களுக்குப் பகிர்ந்தளித்து, அவர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்கும் இலக்கை அடைய வேண்டும். அதற்கேற்ற வகையிலேயே நகர்வுகள் இடம்பெற வேண்டும்.





LEGAL STUDIES TUITION


YEAR 11 AND YEAR 12

BY VICTORIAN SOLICITOR

FOR FURTHER DETAILS

PLEASE CONTACT:
0405982583
or
Email: nag418662@gmail.com




எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI
எதிரொலி
Ethiroli
உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்
ஆறாவது ஆண்டில்
காலடி எடுத்து வைக்கும்
எதிரொலி செய்திகள்
மற்றும்
அவுஸ்திரேலிய இதழ்களை
ethiroli.com
ஊடாகவும்
பார்வையிடலாம்.
SAMSUNG
ஆஸ்திரேலியா - இலங்கை
வாராந்த கப்பல் சேவையை
கொண்ட ஒரே நிறுவனம்
நாடாளுமன்ற அமர்வை
இடைநிறுத்திய 'கோட்டா கோ ஹோம்'
கோஷம்!
வாசகர்களின் வாசல்களை தேடிவரும் எதிரொலி
வருடாந்தம்
$100
ஆஸ்திரேலியாவில் வெளிவரும்
ஒரே தமிழ்ப்பத்திரிகை
உங்கள் வாசல்களுக்கு
தபால் மூலம் தேடிவருகிறது
தொடர்புகளுக்கு:
தொ.பே: 0420810355,
Email: ethirolimelbourne@gmail.com
SHIPPING SCHEDULE
1500
நாட்கள்
தடுப்பின்

# பாட்டி அகதி... அம்மா அகதி! நானும் அகதி!!

# The Citizens of Maladies

## சந்ததியாக நீளும் ஏதிலிகளின் போராட்டம்

தாய் நிலத்தோடு பற்றிப் படர்ந்து வளர்ந்த ஒரு மரத்தை வேரோடு பிடுங்கியெடுத்து, அது வாழக்கூடிய தன்மையற்ற மண்ணில் அதனை மீண்டும் நடுகை செய்வதற்கு ஒப்பானது அகதி வாழ்க்கை.

தன்சொந்த நிலத்தை இழப்பது என்பது தாய்மடியற்ற குழந்தையின் வேதனைக்கு ஒப்பானதே. இலங்கைப் பேரினவாத அரச படைகளின் தாக்குல்களில் இருந்து தப்பித்து, 90 களின் முற்பகுதியில் தமிழ்நாட்டின் அகதி முகாம்களில் தஞ்சமடைந்த மக்களின் அத்தகைய வேதனைகளும், இன்னல்களும் இன்னமும் தீராத் தொடர்கதையாக நீள்கின்றன.

என்னதான், தமிழகம் - தமிழர்களின் தாயகம் என்று சொல்லப்பட்டாலும், ஈழத்தமிழ் அகதிகளின் நடமாட்டமும், அவர்களும் வாழ்வும் கழுகுக்கண்களால் காவல் செய்யப்படுகின்றன. அவர்களது சுதந்திரவாழ்வுக்கான சிறகுகள் ஒடிக்கப்பட்டு, ஏறக்குறைய சிறைவாசத்தை ஒத்த வாழ்வே அவர்களுக்குப் பரிசளிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசபடைகளின் அட்டூழித்திலிருந்து தப்பித்து, 90 ஆம் ஆண்டு தனது 5 வயதில் அடைக்கலமான ஏதிலியொருவர், எவ்வாறு தனது வலிசுமந்த வாழ்க்கையை தமிழக அகதிமுகாமிலில் ஆரம்பித்திருந்தாரோ அவருடைய 10 வயது மகனும் அதே அகதி வலியை தற்போதும் ஆஸ்திரேலியாவில் அனுபவித்து வருகிறார்.

தனது தாய், சகோதரி, சகோதரனுடன் அகதிகளுக்கான விசா வழங்கக் கோரிய போராட்டங்களில் குரலெழுப்பி வரும் கிருத்திக் என்ற 10 வயதுச் சிறுவனை 'எதிரொலி' சந்தித்திருந்தது.

இதன்போது அவருடன் அவருடைய தாய் மற்றும் சகோதரிகளும் உடனிருந்தனர். அவர்களுடன் பேசியவற்றிலிருந்து,

" நான் போராட்டங்களில் பங்கெடுப்பது ஆஸ்திரேலிய மக்களுக்கு எங்கட பிரச்சினை தெரிய வேண்டும் என்றுதான். எங்கட பிரச்சினை என்றால் எங்கட நாட்டுப்பிரச்சினை இல்லை. எங்களைப் போன்ற சிறுவர்கள் எதிர்கொள்கிற பிரச்சினைகள் வெளியே தெரிய வேண்டும். எனக்கு இப்போது 10 வயது தான். எனக்கு எங்கட நாட்டுப் பிரச்சினை பற்றித் தெரியாது. ஆனால் எங்கட அம்மா, அப்பா ஏன் பயங்கரமான கடல்வழியைத் தேர்ந்தெடுத்தவை எண்டதில இருந்து ஒருவிடயம் தெரிகிறது. இந்தப் பயங்கரமான படகுவழிப் பயணத்தைத் தாண்டி ஏதோ பயங்கரம் எமது நாட்டில் நடந்திருக்கிறது - நடக்கிறது"- என்று இந்தச் சின்னவயதிலும் தன் வலியை எடுத்துரைக்கத் தொடங்கினார் கிருத்திக்.

"தற்போது எமக்கு பாடசாலை விடுமுறை,என்னோடு படிக்கும் சக நண்பர்கள் தாங்கள் சுற்றுலாவாக பாலித்தீவுக்குப் போகினமாம், இந்தியா போகினமாம் என்று சொல்லும் போது ,நானும் அந்த இடங்களுக்குச் செல்லவெண்டுமென்று அம்மாவிடம் சின்ன வயதிலிருந்தே கேட்பேன். ஏன் நாங்கள் அம்மம்மா, அப்பம்மாவை பார்க்க இந்தியா போக முடியாதா? என்று சில வேளைகளில் அடம்பிடிப்பேன். அதன்பின்னர் தான் எனக்கு அம்மா எங்கட நிலைமையைச் சொன்னார். என்னோட, படிக்கிற நண்பர்கள் தங்களது தாத்தா ,பாட்டி வீட்டுக்குச் செல்கிறார்கள். அவர்கள் வாங்கிகொடுப்பது போன்ற பரிசுகள் எங்களுக்கு கிடைப்பதில்லையே."- ஒரு மழலையின் ஆதங்கம் வார்த்தைகள் வழியே கனத்தது.

" என்னுடன் சேர்ந்து படிக்கும் சக நண்பர்கள் தங்களுக்கு விசா கிடைத்து விட்டது ,உங்களுக்குக் கிடைக்கவில்லையா என்று கேட்கும் போது எனக்கு சரியான வேதனையாக இருக்கும்.

தற்போது அண்ணா உயர்கல்வி கற்கவேண்டும். ஆனால் எங்கட வீட்டில்எப்படி படிக்க வைப்பது என்பது தொடர்பாகவே அம்மாவும் அப்பாவும் சிந்தித்துக்கொண்டிருக்கின்றனர். எனக்கு படிக்கிறதில் ஆர்வம் குறைந்து கொண்டிருக்கிறது. உயர்கல்வி படிக்கிறதெண்டால் நிறையக் காசு கட்ட வேண்டும். மற்றைய ஆஸ்திரேலிய மாணவர்களுக்கு கிடைக்கும் வாய்ப்பு ஏன் எங்கட அண்ணாவுக்கு இல்லை ? இந்த பிரச்சினை எங்களுக்கு மட்டுமானதல்ல. எம்மோடு பல அண்ணாக்கள் சேர்ந்து போராடுகிறார்கள். அவர்களுக்கும் இதே பிரச்சினை. ஆகவே அனைவரும் சேர்ந்து போராடினால் தான் தீர்வு கிடைக்கும்" என்று தனது வாழ்வுரிமைக்காக போராடும் கிருத்திக் தெரிவித்தார்.

தனது தம்பியான கிருத்திக் பேசுவதைக் கவனித்துக் கொண்டிருந்த சிபி, 'நாம் ஆஸ்திரேலியாவில் எங்கு வேண்டுமானாலும் செல்ல முடியும். ஆனால் நாம் விரும்பிய நாட்டுக்குச்செல்ல முடியாது என்று தடைவிதிப்பதும் ஒருவகையான சிறைதான். அந்த வகையில் தான் எமது தாயும் தந்தையும் அவர்களது பெற்றோரையும், நாங்கள் எங்களது தாத்தா பாட்டியையும் சந்திக்க வாய்ப்பு மறுப்பதும் ஒருவகைச் சிறைதான். அதுமட்டுமின்றி நான் பாடசாலைக் கல்வியைக் கற்க முடிகிறது. ஆனால் நான் மேற்படிப்பை படிப்பதற்கு பணம் கட்ட வேண்டும். எனக்கு இலவசக் கல்வியைக் கற்கும் சந்தர்ப்பம் மறுக்கப்பட்டிருக்கிறது. அது ஒருவகையான அடிப்படை உரிமை மீறலாகும். அதியுயர் கல்வியை கற்பதற்கான பணத்தேவையே அதிகம். இதனை நினைக்கும் போதே படிக்கிற சிந்தனையே இல்லாமல் போகிறது' என்று கூறுகிறார்.

'நாங்கள் இலங்கையின் கிழக்கே திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்தவர்கள். 90 களில் இடம்பெற்ற இராணுவப் படுகொலையில் எமது உறவினர்கள் கொல்லப்பட்ட கொடூர சம்பவங்களிலிருந்து தப்பித்து வந்தவர்களில் நானும் ஒருத்தி. நான் 5 வயதாகவே இருக்கும் போதே எனது பெற்றோருடன் தமிழக அகதிமுகாமுக்குள் 90 ஆம் ஆண்டு தஞ்சமடைந்தோம். தமிழக அகதிமுகாமிலேயே எனது ஆரம்பக் கல்வியை ஆரம்பித்தேன். தமிழக அகதிமுகாமிலேயே எமது கல்வி வரையறுக்கப்பட்டது. பல்கலைக்கழகம் செல்லவே முடியாது. அதிகமாக படித்தாலும் கூலித்தொழில் தான் இறுதி வாய்ப்பு என்பது எங்களுக்கு தெரியும்.




அதுமட்டுமின்றி தமிழக அகதிமுகாம் வாழ்க்கை என்பது துயரமானது . பொலிஸ் - இந்தியப் புலனாய்வு பிரிவு ஆகியவற்றின் தொல்லை அளவுக்கதிமானது. விசாரணை என்ற பெயரில் அத்துமீறிய வன்முறைத்தாக்குதல்களை மேற்கொள்வார்கள். ஆண்-பெண் வித்தியாசமின்றி எங்களை வதைத்தெடுப்பார்கள். இந்த தொல்லையில் இருந்து தப்பித்து , நிம்மதியான வாழ்கையைத் தேடியே ஆஸ்திரேலியா வந்தோம்.

நான் எனது கல்வியில் எதிர்கொண்ட பிரச்சினையைதான் எனது பிள்ளைகள் தற்போது எதிர்கொள்கின்றனர். எனது நண்பர்கள் பலரின் பிள்ளைகள் தரம் 12 கற்ற பின்னர் ,தற்போது கம்பனிகளில் தான் வேலை செய்கிறார்கள். எனது பிள்ளைகளும் நன்கு படிப்பார்கள்- ஆனால் நிரந்தர விசா இல்லாது விட்டால் அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும். இது தான் என் மனதைக் கஸ்ரப்படுத்துகிறது. எனது பெற்றோரும் அகதிகள், நானும் அகதி, எனது பிள்ளைகளும் அகதி. வாழ்க்கை இப்படியே இழுபட்டு செல்கிறது' என்று மனவிரக்தியுடன் தனது வலியை பகிர்ந்து கொள்கிறார் கிருத்திக்கின் தாயார்.




படங்கள் : பிரசன்னா

Refugee life is like uprooting well grown tree and replanting it in unlivable soil without their consent. When did we ask the consent of innocent souls?

Losing one's land is like the agony of a motherless child. Such pains and sufferings of the people who escaped from the clutches of the Sri Lankan chauvinist government forces and took shelter in the refugee camps of Tamil Nadu in the early 90s are still a long story.

Even though Tamil Nadu is said to be the homeland of the Tamils, the movements and lives of the Elamite refugees are being guarded by eagle eyes. Their wings of freedom have been clipped and they have been thrown with a life almost akin to imprisonment. A 10-year-old son of Refugee, who fled the brutality of the Sri Lankan government forces and took refuge at the age of 5 in 1990, started his painful life in a refugee camp in Tamil Nadu.

Ethiroli met a 10-year-old boy named Krithik, who along with his mother, sister and brother was raising his voice in the protests demanding visas for refugees. He was accompanied by his mother and sisters. From talking to them...

"I participate in the protests so that the Australian people know about our problem. Our problem is not our country's problem. The problems faced by children like us should be exposed. I am 10 years old now. I don't know about the problem of our country. But why our mother and father chose the terrible sea route seems to be one thing. "Beyond this terrible boat journey, something terrible has happened in our country - is happening" - Krithik began to express his pain even at this young age."

"Now we have school holidays, when my friends who study with me say that they are going to Bali or India for a trip, I would ask my mother from a young age that I should also go to those places. Why can't we go to India to see our grandma and granddad? I will pester them sometimes. Only then my mother told me about our situation. My friends who are studying go to their grandparents' house. We will never get gifts like what they do." - A child's agony and anxiety were felt through the words.

My fellow friends ask me every time, "if we can get their visas, Why can't you get it ? "


My Brother must go for higher education. But mom and dad are thinking about how to make them study considering our situation. I am losing interest in studying. Higher education costs a lot of money. Why doesn't My brother have the same opportunity as other Australian students? This problem is not only unique to us. Many brothers are fighting with us. They have the same problem. So we will get a solution only if everyone fights together," said Krithik, who is fighting for his right to live freely and study.

After listening to his younger brother Krithik speak, Sibi said, 'We can go anywhere in Australia. But We are prohibited to go outside of Australia to any place of our choice is also a kind of prison. In that sense, denying our parents the opportunity to meet their parents (our grandparents) is a kind of prison. Apart from that I am allowed to learn school education, But I must pay for my higher studies. I have been denied the opportunity of free education unlike others. It is a violation of fundamental rights. Higher education costs a lot of money. He also said that while thinking this the aspiring for education disappears from our thoughts.

"We are from the Trincomalee district in the east of Sri Lanka. I am one of those who survived the brutal incidents of our relatives being killed in the military massacre in the 90s. When I was 5 years old, I took refuge with my parents in Tamil Nadu Refugee Camp in 1990. I started my primary education in the Tamil Nadu Refugee Camp. Our education was limited in the Tamil Nadu refugee camp. We Can't go to university at all. Even after studying higher-education, we are not allowed to work anywhere apart from low skilled daily-wages coolie jobs.

Apart from that, life in Tamil Nadu refugee camp was miserable. The harassment of the Indian Intelligence Services was immense. In the name of investigation, they will carry out outrageous and violent attacks. Men and women will torture us without distinction. We came to Australia in search of a peaceful life to escape from these gruesome troubles.

My children are also facing the same problem now what I faced earlier. Many of my friends' children are ended up working in companies after completing their HSC. My children would also study well - but without a permanent visa their future would be in question. This is what blows my mind. My parents are refugees, I am a refugee, and my children are refugees. Krithik's mother shares her pain with despair, 'Life drags on like this without any light in sight.'



# தமிழ் பௌத்தத்தை ஏற்பதா தவிர்ப்பதா?

ஜெரா

தமிழர் தாயகப் பகுதிகள் மீது நடத்தப்படும் பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளைத் தடுக்கத் தமிழர்கள் தமிழ் பௌத்தத்தை மீண்டும் கையிலெடுக்க வேண்டும் என்கிற கோரிக்கைகள் பலராலும் முன்வைக்கப்படுகின்றன. யார் பூனைக்கு மணி கட்டுவது என்கிற கணக்கில் முன்வைக்கப்படும் இக்கோரிக்கைகளுக்கு மேலும் வலுச் சேர்ப்பதாய் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைய அறிவிப்பொன்றும் அமைந்துவிட்டது. அதாவது வடக்கு, கிழக்கு பகுதிகளில் காணப்படும் பௌத்த விகாரைகளுக்குரிய எச்சங்கள் தமிழ் பௌத்தர்களுக்குரியவை என்ற அறிவிப்பே அது.

இந்த அறிவிப்பின் வழியே ஜனாதிபதி இரண்டு விடயங்களுக்கு சமாளிப்பு செய்திருக்கின்றார். ஒன்று, வடக்கு கிழக்கில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் பௌத்த விகாரைகளின் பின்னால் திட்டமிட்ட சிங்களமயமாக்கல் செயற்பாடுகள் இல்லை. அவ்வாறு அமைக்கப்படும் பௌத்த விகாரைகளானவை ஏற்கனவே தமிழர்கள் வழிபட்டு வந்தவை. அவற்றையே தற்போது மீளமைக்கிறோம் என்பது. இரண்டாவது, இதுவரை அமைக்கப்பட்டுள்ள பௌத்தவிகாரைகளுக்கும், இனிமேல் அமைக்கப்படவுள்ள பௌத்த விகாரைகளுக்கும் அரசியல் சாயம் பூசிப் பார்க்கத் தேவையில்லை. வடக்கு, கிழக்கில் காணப்படும் சைவ ஆலயங்களைப் போலவே தமிழர்கள் வழிபடுவதற்கு தமிழ் பௌத்த விகாரைகளை அரசு அமைக்கிறது என்பது. எனவே ஜனாதிபதியின் தமிழ் பௌத்தம் குறித்த நிலைப்பாடானது, வடக்கு, கிழக்கு பகுதிளில் இடம்பெறும் பௌத்தவிகாரை அமைப்புக்களையும், அதன் பின்னணியில் இடம்பெறும் சிங்களமயமாக்கல் செயற்பாடுகளையும் வெற்றிகரமாக மடைமாற்றியிருக்கிறது.

## தமிழர்கள் தமிழ் பௌத்தத்தை ஏற்றிருந்தனரா?

தமிழர்கள் தமிழ் பௌத்தத்தை ஏற்றிருந்தனர். பௌத்தம் இலங்கைத் தீவுக்குள் நுழைந்த காலம் தொட்டு, யாழ்ப்பாணத்தில் சாதிய முரண்பாடுகள் அதிகரித்திருந்த 1970 ஆம் ஆண்டுவரைக்கும் தமிழர்கள், தமிழ் பௌத்தத்தைப் பின்பற்றிவந்திருக்கின்றனர். 1970 ஆம் ஆண்டில் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் மகன் 600 இற்கும் மேற்பட்ட தமிழர்களோடு பௌத்தத்தை ஏற்றிருக்கின்றார்.

அதேபோல , வடக்கு, கிழக்கில் பல இடங்களில் பௌத்த விகாரைகள் இருந்திருக்கின்றன. கௌதம புத்தரது சிலைகள் இருந்துள்ளன. அவை கட்டட அமைப்பிலும், புத்தரது சிலை அமைப்பிலும், வழிபாட்டு முறையிலும் தேராவாத பௌத்த பிரிவின் பண்புகளைக் கொண்டவையல்ல. அனைத்து விதத்திலும், தேராவாதப் பிரிவு எதிர்த்து நின்ற மஹாயானப் பிரிவுக்குரிய பண்புகளைக் கொண்டது. மஹாயானப் பிரிவினரை தேராவாதம் எதிர்த்தமைக்கு மகாவம்சத்திலேயே பல சான்றுகள் உண்டு. இலங்கையின் வரலாற்றிலேயே அதிகளவு நீர்ப்பாசனப் பணிகளை மகாசேன மன்னன் செய்த போதிலும், உரிய கௌரவத்தைப் பெறாமைக்குக் காரணம் அவர் மஹாயானப் பிரிவினராக இருந்தமையே. இந்த எதிர்ப்புணர்வுக்கு மஹாயானப் பௌத்த பிரிவினர், தமிழர்களாக இருந்தமைகூட ஒரு காரணமாக இருந்திருக்கலாம். நயினாதீவினைச் சேர்ந்த அரசுடமைகொண்ட சகோதரர்களின் பிணக்கினைத் தீர்க்க புத்த பெருமான் இங்கு வந்தாக வரலாற்றுக் குறிப்புகள் உண்டு. அந்தக் குறிப்பு உண்மையெனில் பௌத்தத்தின் அறிவுரையைக் கேட்கக்கூடிய ஆளுந்தரப்பொன்று வடபாகத்தில் இருந்தமை புலனாகிறது அல்லவா? அதேநேரத்தில் மகாவம்சம் குறிப்பிடும் உத்தரதேசத்தவர்களது (வட மாகாணத்தவர்களது) படையெடுப்பும், தமிழர்களது படையெடுப்புக்களாகவே காட்டப்படுகிறதல்லவா. உதாரணமாக எல்லாளன், சேனன் குத்திகன் உள்ளிட்ட ஏழு வணிகர்கள் என அனைவருமே வட மாகாணத்திலிருந்து சிங்கள ராச்சியமான அனுராதபுரம் நோக்கி படையெடுத்தவர்களாக காட்டப்படுகிறது. இந்தச் செய்தியிலிருந்து தெரிவதென்ன. வட மாகாணத்தில் தமிழ் அரசுகள் இருந்துள்ளன. அவை புத்த பெருமானின் ஆலோசனை கேட்டு ஒழுகும் பண்புடையனவாக இருந்திருக்கின்றன.

அதேபோல தமிழகத்தில் சங்கமருவிய காலத்தில் தமிழ் பௌத்தம் எழுச்சியுற்றிருந்தமைக்கான வலுவான தொல்லியல், இலக்கிய சான்றுகள் உள்ளன. இக்காலத்தில் உருவான அனைத்து ஆற்றுப்படுத்தல் இலக்கியங்களிலும் பௌத்த தத்துவங்கள் மிகையாகப் பொதிந்திருக்கின்றன. தமிழகத்தோடு நெருக்கமான தொடர்பினை மொழி, கலாசார, பண்பாடு விடயங்களில் தமிழகத்தோடு நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருக்கும் வடக்கு, கிழக்கு பாகங்கள் அங்கு எழுச்சியுற்றிருந்த தமிழ் பௌத்த பண்பாட்டு விடயங்களையும் நிச்சயமாக ஏற்றிருக்கவே வாய்ப்புண்டு.

பௌத்தம் இலங்கைத் தீவிற்குள் நுழைந்த பிரதான வழியே வடக்கில்தான் இருக்கிறது. ஒரு பண்பாட்டுப் பயணம் இன்னொரு நாட்டுக்குள் முதன்முதலாக நுழையும்போது எடுத்த எடுப்பிலேயே நாட்டின் மத்திய பகுதிக்குள் நுழைய வாய்ப்பில்லை. தொடர்புகளும், போக்குவரத்து வசதிகளும் குறைந்த வரலாற்றுத் தொடக்க காலப்பகுதியில் எடுத்தவுடன் ஒரு பண்பாட்டு வடிவம் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் பரவுவது சாத்தியமற்றது. சில நூற்றாண்டுகள் ஓரிடத்தில் தங்கியிருந்து, பின்னர் தனக்கு வாய்ப்பான சூழல் நோக்கி பரவி, தகுந்ததொரு இடத்தைப் பிடித்துக்கொள்வதே பண்பாடுகளின் பொது இயங்கியலாக இருந்திருக்கிறது. பௌத்த பண்பாட்டிற்கும் அதுவேதான் நடந்திருக்க வாய்ப்புண்டு. தமிழ் பௌத்தமாக இலங்கை தீவுக்குள் நுழைந்த பௌத்த வாழ்வியல் தத்துவம் நாட்டின் மத்திய பகுதியை அடைந்து நிலைபெறும்போது சிங்கள பௌத்தமாக வடிவம்பெற்றிருக்கிறது.

## தமிழர்கள் ஏன் தமிழ் பௌத்தத்தைக் கைவிட்டனர்?

அதற்கும் பிரதான காரணமே தமிழகம்தான். தமிழகத்தில் எழுச்சி பெற்ற பௌத்தத்தையும், சமணத்தையும் அழிக்க உருவான பல்லவ பண்பாட்டின் தாக்கம் வடக்கு, கிழக்கிலும் ஏற்பட்டது. பல்லவர் காலத்தில் மிக முக்கிய சைவமதக் காப்பாளர்களாக இருந்த சமயக்குரவர்கள், திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் மீது பதிகம் பாடுமளவுக்கு பண்பாட்டு ரீதியாகத் தொடர்புபட்டிருக்கிறார்கள். எனவே பல்லவர் காலத்தில் தமிழகத்திலிருந்து பௌத்தமும், சமணமும் எவ்வாறு மக்கள் நீக்கம் செய்யப்பட்டதோ, அவ்வாறே இலங்கையின் வடக்கு, கிழக்கு பாகங்களிலும் நடந்திருக்க வாய்ப்புண்டு. இப்பிராந்திய மக்கள் பின்பற்றாத தமிழ் பௌத்தம் வழக்கொழிந்துபோனது. ஆனால் அதன் எச்சங்களைத் தமிழர்கள் ஒரு போதும் அழிக்கவில்லை. இலங்கை அரசு தமிழர்கள் மீது அனைத்துவிதமான அழித்தொழிப்பு வேலைகளைக் கட்டவிழ்த்துவிட்ட போதிலும், வடக்கு, கிழக்கு பாகங்களில் இருந்த பௌத்த அடையாளங்களைத் தமிழர்கள் அழிக்கவில்லை. பௌத்தத்தை தம் எதிர் மதமாகத் தமிழர்கள் கருதியிருப்பின், வடக்கு, கிழக்கில் இருந்த அத்தனை பௌத்த தொல்லியல் எச்சங்களையும் அழித்தொழித்திருக்க முடியுமல்லவா? ஆனால் அதனைத் தமிழர்கள் செய்யாமையின் முக்கியமான நோக்கமே, பௌத்தத்தையும் தம்மோடு உள்ளீர்த்துக்கொண்டமைதான். தாம் கைவிட்டிருப்பினும், மரபார்ந்த தொல்பொருளொன்றைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்புணர்வோடு செயற்பட்டமைதான்.

## இப்போது மீளவும் தமிழ் பௌத்தத்தை ஏற்க முடியுமா?

இந்தக் கேள்விக்கு பதில்காண வேண்டிய கட்டத்திற்குத் தமிழர்கள் வந்துள்ளனர். ஏற்கனவே சமயப் பிரச்சினைகளால் இனங்களுக்கிடையில் பிளவுகள் ஏற்பட்டிருக்கும் இன்றைய நிலையில், மீண்டும் புதியதொரு பிரிவாக தமிழ் பௌத்தத்தை ஏற்று எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றும் பணியை தமிழர்கள் செய்ய விரும்பார். அத்தோடு, தெற்கை மையப்படுத்தி உருவாகியிருக்கும் தேராவாதப் பௌத்த பிரிவு குறித்த அச்சம் தமிழர்கள் மனதில் ஆழமாகப் பதிந்திருக்கிறது. அமைதியையும், உயர் மாண்புகளையும், கருணையையும், உயிர்கொல்லாமையையும் வாழ்க்கைத் தத்துவமாக போதித்த வெண்ணிற புத்தபெருமானை ஆக்கிரமிப்பின் அடையாளமாக மாற்றியிருக்கிறது மேலான்மைவாத அரசியல். எனவே தமிழ் பௌத்தத்தை மீளக் கொண்டுவருவது இன்னொரு ஆபத்தை வலிந்து ஏற்படுத்திக்கொள்ளும் நிலைமையை ஏற்படுத்தும்.

தமிழர்கள் தம் பண்பாட்டை பழையன கழிதலும் புதியன புகுதலுமாகவே கட்டமைத்திருக்கிறார்கள். பழைமையானவற்றை முற்றாகக் கைவிடாது, தம் வாழ்வோடு இணைத்துப் பாதுகாத்தும் வருகிறார்கள். தமிழ் பௌத்தமும் அவ்வாறானதே. நாம் பின்பற்றிய ஒரு பண்பாட்டுக்கூறாகத் தமிழ் பௌத்தத்தை வைத்திருப்பதும், அதனை ஒரு மரபார்ந்த பண்பாட்டு அடையாளமாக ஆவணப்படுத்திக்கொள்வதுமே காலப்பொருத்தமானதாக அமையும்.

# தமிழ் பேசும் மக்களின் தற்காப்பு நிலையே மாகாணசபை!

## மாற்றத்துக்கு இதுவே தக்க தருணம்

## சுகு ஸ்ரீதரன் நேர்காணல்

தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் பொதுச்செயலாளராக இருக்கும் சுகு ஸ்ரீதரன், ஈழவிடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகாலப் போராளிகளில் ஒருவர். ஏறக்குறைய 45 ஆண்டு கால அரசியல் போராட்ட வரலாற்றைக் கொண்டவர். ஆயுதப் போராட்ட அரசியல், ஜனநாயக நீரோட்ட அரசியல் என இரண்டிலும் செழிப்பான அனுபவங்களைக் கொண்ட சுகு, பல தரப்பினருடைய மதிப்பையும் தன்னுடைய நற்குணத்தினாலும் சிந்தனைத் திறத்தினாலும் பெற்றவர். புதுடில்லி, தமிழ்நாடு, தென்னிலங்கை, மலையகம் என விரிந்த பரப்பில் அரசியல் உறவுகளைக் கொண்டிருக்கும் சுகு, தமிழ், முஸ்லிம், மலையக மக்களிடத்திலும் அந்தந்தச் சமூகத் தலைமைகளிடத்திலும் மதிப்புண்டு. எதையும் வித்தியாசமாகச் சந்திக்கும் இயல்பும், எந்தப் பிரச்சினையையும் அதன் வரலாற்றுச் சூழலிலும் சமூகச் சூழலிலும் சர்வதேசச் சூழலிலும் வைத்துப் பார்க்கும் தன்மையும் சுகுவின் அடையாளமாகும். 45 ஆண்டு கால அரசியல் வாழ்வில், தலைமறைவு வாழ்க்கை, சிறை, அரசியல் வகுப்புகள், களப்பணி, மக்கள் போராட்டங்கள், தேர்தல் அரசியல் எனப் பலவற்றையும் சந்தித்த ஆளுமை. எதிரொலிக்காக இந்த நேர்காணல்.

**நேர்கண்டவர் : கருணாகரன்**

**இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த இளைஞர்களும் இயக்கங்களும் தோற்றுப் பின்வாங்கியதற்கான காரணம் என்ன?**

சகோதரப் படுகொலை. அதன் விளைவு, மக்கள் மத்தியில் ஏற்பட்ட அவ நம்பிக்கை. சர்வதேசப் பிராந்திய எதார்த்தங்களைப் புரிந்து கொள்ளாமை.

சக சமூகங்கள் மீதான பகைமைப் படுகொலைகள். சர்வதேச தேசியத் தலைவர்கள் மீதான தாக்குதல்கள். இயக்கங்கள் பின்வாங்கவில்லை. உள்ளிருந்தே பின்வாங்கச் செய்யப்பட்டன.

**இவற்றை ஏன் முன்னுணரவில்லை. ஏனென்றால் அப்போதே சர்வதேச அரசியல் பார்வையை இந்த இளைஞர்களும் இயக்கங்களும் முன்வைத்ததுண்டு. அப்படியிருக்கும்போது தவறுகளின் மேல் தவறுகள் ஏன் நிகழ்ந்தன?**

பொத்தம் பொதுவாக இவ்வாறு கூற முடியாது. எல்லா இயக்கங்களுக்கும் அவ்வாறான சர்வதேசப் பார்வை இருந்தது என்று கூற முடியாது. குறுங்குழுவாத சிந்தனையே தூக்கலாக இருந்தது. சில இயக்கங்களுக்கு அவ்வாறான பார்வை இருந்தாலும் செயற்படுவதற்கான சமூக இடைவெளி அழிக்கப்பட்டிருந்தது.

**ஆயுதப்போராட்ட இயக்கங்களின் வழிமுறையை நிகராகரித்த அல்லது அதற்கு வெளியே நின்ற அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் அல்லது இன்றைய தமிழ்த்தேசிய அடையாளக் கட்சிகளின் நிழலில் இந்த இயக்கங்கள் சரணடைய வேண்டி வந்ததை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

அரசியல் அற்ற ஆயுதம் ,கண் மண் தெரியாமல் செய்த படுகொலைகள், ஜனநாயக மறுப்பு, பெருவாரியான இளைஞர் யுவாதிகளின் அர்ப்பணிப்புகளை இழிவாக்கி ஆசாட பூதிபிரமுகர்கள் மேல் என்ற நிலையை சமூகத்தில் உருவாக்கியது, ஊழலும் அயோக்கியத்தனமும் கபடதாரித்தனமான பாரம்பரிய ஆளும் வர்க்க அரசியல் படுகொலை. அரசியலுக்கு இது பரவாயில்லை என்றவாறு மக்களினதும் போராளிகளதும் அர்ப்பணங்கள் அவமாக்கப்பட்டன.

**புலிகளின் காலத்திற்கும் (2009 க்கு முன்பும்) அதற்குப் பின்னுள்ள இன்றைய நிலைக்கும் உள்ள வேறுபாட்டை - அரசியல் நிலைமையை எப்படிப்பார்க்கிறீர்கள்?**

புலிகளின் காலத்தில் ஜனநாயக இடைவெளி இருக்கவில்லை. மாற்றுக் கருத்துக் கொண்டோரை உயிர் மீதமின்றி அழிக்கும் போக்கே மேலோங்கி துருத்திக் கொண்டிருந்தது. இன்று 100 கருத்துக்கள் முட்டி மோதுவதற்கான இடைவெளி இருக்கிறது. ஆனால், ஏற்கனவே 2009 க்கு முன்னர் இருந்த தலைமுறைகள் அழிந்து விட்டன. ஆளுமையுள்ள தலைமைத்துவங்கள் அழிக்கப்பட்டன. அரசியல் தலைமைத்துவம் மாத்திரம் அல்ல. அறிவு ஜீவிகள், தொழிற்சங்கவாதிகள், ஊடகவியலாளர்கள் பலர் கொல்லப்பட்டனர். கணிசமான பகுதியினர் புலம்பெயர்ந்து சென்று விட்டனர்.. ஒரு வறண்ட சமூகம் மிச்சமாகி விட்டிருக்கிறது. ஒரு கணம் சிந்தித்துப்பாருங்கள். இவர்கள் உயிருடன் இருந்தால் எத்தனை பெரிய சமூக வளம்! வாராது வந்துற்ற மாமணிகளை தோற்றோம்.



**இன்றைய நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவது எப்படி? அதற்குச் சாத்தியமான வழிகள்?**

தமிழ் பேசும் மக்களின் நிலை தற்காப்பு நிலையே இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவான மாகாண சபை முறைமை. அனைத்து சமூகங்களுக்காகவும் அதனை நாம் ஆதரித்துக் கொண்டு அதன் அதிகாரங்களை 1988இல் சொல்லப்பட்டவாறு உள்ளது உள்ளபடி முழுமையாகப் பகிர்ந்து கொள்ள முயல்வதே சிறப்பு.

மற்ற நிலைப்பாடுகள் எவ்வாறு இருந்தாலும் இந்த ஒரு விடயத்திலாவது தமிழ் -முஸ்லிம் -சிங்கள -மலையக ஜனநாயக சக்திகள் ஒன்றிணைய வேண்டும். இல்லாவிட்டால் முடியாது.

**இந்த வழிகளைக் குறித்து ஒருமித்த எண்ணம் தமிழ், சிங்கள, முஸ்லிம் கட்சிகளிடத்தில் இல்லையே!**

ஆரம்பத்திலேயே கூறியவாறு இதுதான் இங்கு பிரச்சினை. வடக்கு- கிழக்கு தமிழ்க் கட்சிகளிடம் எப்போதாவது இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஒருமித்த கருத்து நிலவியதா அல்லது புரிதல் இருந்ததா? எப்போதாவது விதிவிலக்கான சந்தர்ப்பங்களைத் தவிர. இதற்கு தமிழ் -முஸ்லிம்- மலையக- சிங்கள ஜனநாயக சக்திகள் இடையே புரிதலை உண்டாக்குவது ஒரு சவால். ஆனால் அதனைச் செய்து தான் ஆகவேண்டும். 2022 இல் நடந்த 'அரகலய' எழுச்சி சூழல் கூடவோ குறையவோ ஒரு இணைந்து செயல்படுவதற்கான வெளியை உருவாக்கி இருக்கிறது. இந்த எழுச்சி இனவாத சக்திகளுக்குத் தடுமாற்றங்களை உண்டாக்கியது. ஆனால் தற்போது மீண்டும் இன மதவாத சக்திகள் சமூகங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் பதற்றங்களையும் பூசல்களையும் உருவாக்குகின்றன .இவற்றைத் தாண்டியாக வேண்டும்.

**இனப்பிரச்சினைக்கான தீர்விலும் இலங்கையின் அரசியல் பொருளாதார நிலைப்படுத்தலிலும் இந்தியாவின் அனுசரணை, வகிபாகம் குறித்துத் தொடர்ச்சியாகப் பேசப்படுகிறது. ஆனாலும் இந்தியா இன்னும் இனப் பிரச்சினைக்கான தீர்வில் ஒரு தீர்க்கமான முடிவை எடுத்திருப்பதாகத் தெரியவில்லையே?**

ஒரே ஒருவிடயம் தான் இருக்கிறது. இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட மாகாண சபை முறை. அதனை வலுப்படுத்த சொல்லி இலங்கை அரசுக்கும் தமிழ் மற்றும் இதர சமூகத் தலைவர்களுக்கும் இந்தியா தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறது. கரிசனைகள் முதலில் இலங்கையில் இருந்து வர வேண்டும். அனைத்து சமூகத் தலைமைகளிடமிருந்தும் வர வேண்டும். கூடக்குறைய இந்திய முறையை ஒத்த பிராந்திய மட்டத்தில் அதிகாரக் கட்டமைப்பை இலங்கையில் உருவாக்குவதில் இந்தியா பங்களித்திருக்கிறது.

பிரதானமாக காரியமாற்ற வேண்டியவர்கள் இங்கு உள்ள, அனைத்து சமூகங்களின் தலைவர்களும்தான்.

**உண்மையில் இந்தியா யாருக்கு ஆதரவாக உள்ளது? தமிழர்களுக்காகவா, சிங்களவர்களுக்காகவா அல்லது தமிழ், சிங்கள, முஸ்லிம், மலையக மக்கள் என்ற இலங்கை மக்களுக்காகவா? அப்படியென்றால் இன ஒடுக்குமுறையை இந்தியா எப்படிப் பார்க்கிறது?**

அனைத்து சமூகங்களுக்கும் இந்தியாவுடன் மொழி, கலாசார பாரம்பரிய உறவுகள் உண்டு. 140 கோடி மக்களை கொண்ட ஒரு உபகண்டம் என்ற அளவில் மிக மிக அனைத்து இலங்கையர்களுடனும் உறவைப் பேணுவது பிரதான போக்காக இருக்கும். மற்றது அவர்களிடம் இந்தியாவின் பாதுகாப்பு, சமூக பொருளாதார உறவுகள் சார்ந்தும் கரிசனைகள் இருக்கும். உலகில் நாடுகளுக்கு இடையிலான உறவுகள் அவ்வாறுதான் அமைகின்றன.

22 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள நாடு தொடர்பான கரிசனங்கள் தீவிரமானவை. இலங்கை - இந்திய உபகண்டத்தின் பரஸ்பர நலன்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மக்களிடையிலான உறவுகள் பற்றிய கரிசனை வேண்டும் .பரந்த உலகில் வாழ்வதற்கு எம்மை தகவமைக்க வேண்டும். தீவுச் சிந்தனைகளுக்குள் மூழ்கி விட முடியாது.

**இனப்பிரச்சினைத் தீர்வில் இலங்கை அரசும் சிங்கள அதிகாரத்தரப்புகளும் (கட்சிகள், ஊடகங்கள், புத்திஜீவிகள், மதபீடங்கள்) எவ்விதம் செயற்பட வேண்டும்? இதை எப்படிச் சாத்தியப்படுத்துவது?**

அதற்கான ஒரு பொதுவான இயல்பு, போக்கு எதார்த்தமானது அல்ல. இதில் அவரவரின் வர்க்க நலன்கள் இருக்கின்றன. எனினும் இந்த உலகில் இலங்கை என்ற நாடு கண்ணியமாகவும் சுயமரியாதையாகவும் தன்னை நிலை நிறுத்த வேண்டுமானால் பல இனமாகவும் மொழிகளின் நாடாகவும் மதச்சார்பற்ற நாடாகவும் இராணுவவாத, மதவாத, இனவாத முன்னுரிமைகள் களையப்பட்ட நாடாகவும் அமைய வேண்டும். 2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற 'அரகலய' எழுச்சியில் அத்தகைய சில கூறுகள் காணப்பட்டன. அது வளர்த்தெடுக்கப்பட வேண்டும். சமூக. பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீள வேண்டும். இதை விட வேறு மார்க்கம் கிடையாது.

**நாடு பொருளாதார ரீதியில் பிற நாடுகளிடத்திலும் உலக நிதி நிறுவனங்களிலும் கையேந்திக் கொண்டிருக்கும் நிலையிலும் இனவாதச் சிந்தனை குறையவில்லையே. தொல்பொருட் திணைக்களத்தின் நடவடிக்கைகள் தொடக்கம் தமிழ்த் தரப்பினால் மேற்கொள்ளப்படும் அதிதீவிர நிலைப்பாடுகள் வரையில் ஏட்டிக்குப் போட்டியாக இதைக் காணமுடிகிறது. யுத்தமும் பொருளாதார நெருக்கடியும் தந்த படிப்பினைகள் என்ன?**

நம்மில் ஒற்றுமை இல்லையேல் அனைவருக்கும் தாழ்வு என்பதுதான் படிப்பினை. ஆனால் அந்தப் படிப்பினையை எடுத்துக் கொண்டு முன் செல்வதற்கான அறிகுறிகள் குறைவாகவே காணப்படுகின்றன. வாழ்வா ,சாவா என்ற பொருளாதாரச் சவாலை இலங்கை எதிர்நோக்கி நிற்கையில் இந்தத் தொல்பொருள் தேடுதல்கள் இன,மதவாத பகைமைகளைத் தெரிந்தும் மீள முடியாதபடுகுழியில் வீழ்தலே போலத்தான். பரஸ்பரம் உடன்கட்டை ஏறல் போலத்தான். இன, மத மோதல்கள் எம்மை அழிக்கும் அபாயகரமான போதை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

(16ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் பேசும் மக்களின் தற்காப்பு நிலையே மாகாணசபை!

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மதவாதிகளும் இனவாத அரசியல்வாதிகளும் நாட்டின் அனைத்து சமூகங்களையும் நரகப் படுகுழியில் தள்ளும் போதை வியாபாரிகள் என்பதையும் புரிந்து கொள்ளவேண்டும்

**இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வடக்கு- கிழக்கு இணைப்பும் சுயாட்சிக்குரிய அடிப்படைகளைப் பற்றியும் தமிழ்த்தரப்பினால் வலியுறுத்தப்படுகிறது. இதில் முஸ்லிம்களின் நிலைப் பாட்டையும் கிழக்குத் தமிழர்களின் எண்ணங்களையும் எப்படிச் சரியாக இணைத்துக் கொள்ள வேண்டும்?**

இதற்கு யாரையும் வில்லங்கப்படுத்த முடியாது. அதிகமான உரையாடல் வேண்டும். தமிழ்த் தரப்பு யார் என்ற பிரச்சினையும் இருக்கிறது. நாங்கள்தான் தமிழ்த் தரப்பு என்று யாரும் உரிமை கொண்டாடினால் இன்றைய நிலையில் அது சரியாக இருக்காது.

பரஸ்பரம் பரந்தஅளவில் தமிழ் -முஸ்லிம் தரப்பினரிடமும் சிவில் சமூகம் உட்பட பரந்த உரையாடல் வேண்டும். அதேபோல் மலையக -சிங்கள மக்களுடனும் உரையாட வேண்டும். பரஸ்பர அவநம்பிக்கைகள் குறைந்து போவதற்கு வழி காணப்பட வேண்டும்.

**இனப்பிரச்சினைத் தீர்வை முஸ்லிம்களும் இணைந்தே காணமுடியும். ஆனாலும் தமிழ் - முஸ்லிம் தரப்புகளிடையே (கட்சிகளுக்கிடையிலும் சரி, சமூகங்களுக்கிடையிலும்சரி) இன்னும் சரியான புரிந்துணர்வும் ஒருமித்த நிலைப்பாடும் எட்டப்படவில்லையே? இதற்கான காரணம் என்ன? இதை எப்படிச் சாத்தியப்படுத்துவது?**

அவர்கள் தமிழ் பேசுபவர்களாக இருந்தாலும் முஸ்லிம் மக்களின் தனித்துவங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும். அந்த மக்களின் பாரம்பரிய வாழ்வு, சமூக பொருளாதார நிலைமைகள், வடக்கு- கிழக்கில் அவர்களுடைய நியாயமான அச்சங்கள் புரிந்து கொள்ளப்பட வேண்டும். 1990 இல் உடுத்த துணியுடன் வெளியேற்றப்பட்டது தொடர்பாக தமிழர் தரப்பில் ஆக்கபூர்வமான விமர்சனங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இது தமிழ்த் தேசிய அவமானம். அந்த மக்கள் உரிய முறையில் திரும்ப வரவேற்கப்படவும் இல்லை. தமிழ் பேசும் மக்களாக வாழ்ந்த காலம் சிதைந்து நீண்ட காலம் ஆகிவிட்டது. இரத்தம் தோய்ந்த சகோதர சமூக அனுபவங்கள் இருக்கின்றன. இதைக் கடப்பதற்கு பரஸ்பர புரிதலுக்கான கடுமையான முயற்சிகள் வேண்டும். சமூகங்களுக்குள்ளே தோன்றிய மதவாத ,இனவாத, பிரதேச வாத சக்திகள் சமூகத்தை துண்டு துண்டாக உடைத்துக் கொண்டிருக்கின்றன என்பது வேதனையான உண்மை. இவர்கள் இந்த மதம் என்ற பிரக்ஞையே இல்லாத இடங்களில் எல்லாம் அவை செயற்கையாக உருவாக்கப்படுகின்றன.

**தமிழ்த் தேசியவாதம் உள்வாங்கும் தேசியவாதமாக (Inclusive nationalism) கட்டமைக்கப்படவில்லை. அதனால்தான் அதற்குள் இன, மத, சாதி, பால், பிரதேச வேறுபாடுகள் துருத்திக் கொண்டுள்ளன என்ற குற்றச்சாட்டுப்பற்றி?**

துரதிர்ஷ்டவசமான இந்த உண்மையை இங்கு குறிப்பிட்டு தான் ஆக வேண்டும். யாழ். மைய தமிழ்த் தேசியம் சாதிய, பெண்ணடக்கு முறை போன்றனவெல்லாம் இவற்றின் மேல்தான் எழுந்தது. இதன் மேலாதிக்கம் இன்றளவிலும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. சக சமூக விரோதங்களும் சக இயக்கவிரோதங்களும் அண்டை நாட்டு மீதான விரோதமும் இங்கிருந்துதான் மேற்கிளம்புகின்றன. புலம்பெயர்ந்து சென்று பல்வேறு சமூகங்கள் மத்தியில் வாழ்ந்தாலும் இது தகரவில்லை.

சக மனிதர்களுடன் சேர்ந்து வாழ இதற்கு பயிற்சி அளிக்க வேண்டியிருக்கிறது. கிணற்றுத்தவளை மனோ நிலையில் இருந்து விடுபட வேண்டும். உபகண்ட அளவில் இலங்கையின் அனைத்து சமூகங்களும் இயங்குவதனால்தான் இதற்கு பரந்த இயல்பை கொண்டு வர முடியும்.

**தமிழ்த்தேசியவாதத்தின் ஜனநாயகக் குறைபாடுகளைப் பற்றி?**

அது ஒரு குறைபாடு என்று குறை மதிப்பீடு செய்து விட முடியாது. அது மிகவும் பாரதூரமானது. பால் சமத்துவம், சமூக நீதி, பிரதேசங்கள் இடையிலான சமத்துவம், இவற்றுக்கப்பால் சக அரசியல் சமூக இயக்கங்கள் சக சமூகங்கள் பற்றி சகிப்புத்தன்மை கொண்டதல்ல. யாழ்.மைய மத்தியதர வர்க்க அரசியல் மேலாதிக்கம் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும். தமிழ்- முஸ்லிம் -மலையக மக்களிடையே சமத்துவம் ,சகோதரத்துவம் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

வரலாற்று பூர்வமாகவே இந்த மேலாதிக்கம் பற்றிய கசப்பான அனுபவங்களும் எச்சரிக்கை உணர்வும் சந்தேகங்களும் இருக்கின்றன.

**தமிழர்கள் ஒரு தேசமாகத் திரள வேண்டும் என்பது இனப்பிரச்சினைத் தீர்வுக்குத் தரக்கூடிய சாதகங்கள் என்ன? பாதக நிலை என்ன?**

கடந்த காலம் போல் இப்போது சிந்திக்க முடியாது. புதிய எதார்த்தங்களை கரிசனைக்கு எடுக்க வேண்டும். மொழி சார்ந்து மாத்திரம் அல்லாமல் பிரதேசம், பொருளாதார, பண்பாட்டு அம்சங்கள் போன்றவற்றையும் கரிசனைக்கெடுக்க வேண்டும் .ஜனநாயக பூர்வமாகவே இந்த விடயம் அணுகப்பட வேண்டும். யாழ். மைய சிந்தனையில் இருந்து அகத்தியரின் கமண்டலத்துக்குள் காவிரியை அடக்கியது போல் இதை அடக்கிவிட முடியாது. எதார்த்தம் நம் முன் இருக்கிறது. அதேவேளை பேரினவாத ஒடுக்குமுறை தமிழ்- முஸ்லிம் -மலையக தேசிய சமூகங்களை ஒன்றிணைப்பதற்கான எதார்த்த அவசியத்தை உணர்த்தி நிற்கிறது. அது ஜனநாயக பூர்வமாகவே மேற்கொள்ளப்பட முடியும். கிழக்கு- வடக்கு மாகாணங்களுக்கு இடையில் உள்ள பிரச்சனைகளும் முஸ்லிம் மக்களுடனான உறவுகளும் உரையாடல்கள், உடன்பாடுகளின் ஊடாகவே எட்டப்பட முடியும்.

**சிங்களத் தேசியவாதம், தமிழ்த்தேசியவாதம், முஸ்லிம் தேசியவாதம், மலையகத் தேசியவாதம் என இன்று இன ரீதியான தேசியவாத உணர்வு கூர்மைப்பட்டிருக்கிறது. இந்தச் சூழலில் பகை மறப்பு, நல்லிணக்கம், அரசியல் தீர்வு, சமாதானம் போன்றவற்றை எட்டுவது எப்படி?**

இலங்கையின் இன, மத, மொழி பன்மைத்துவத்தை அந்த யதார்த்தத்தை மானசீகமாக ஏற்றுக் கொள்ளாமல் இது சாத்தியப்படாது. இதயங்கள் இங்கு இணைய வேண்டும்.

இந்தியா சுதந்திரம் பெற்ற காலத்திலேயே மதச்சார்பற்ற நாடாகப் பிரகடனம் செய்யப்பட்டது. அதே நேரத்தில் இந்தியாவின் பலமொழி, பல்கலாசாரத் தன்மை கருத்தில் எடுக்கப்பட்டது. அதனால் தான் இன்றளவில் இந்தியா இந்தியாவாக இருக்கிறது.

இலங்கை மத இனச் சார்பற்ற நாடாக மாறுவதற்கான நெடும் பயணம் மேற்கொள்ள வேண்டும். அதே வேளை சிங்கள- தமிழ் -முஸ்லிம்- மலையக -பறங்கி -மலாய் மக்களின் பிரதேச ரீதியான ஏற்றதாழ்வுகளைக் கரிசனைக்கெடுத்த அதிகாரப் பகிர்ந்தளிப்பு, சமத்துவத்தை உறுதி செய்வதற்கான ஏற்பாடுகள் அவசியம்.

**பிரதான அரசியற் தலைமைகளும் கட்சிகளும் ஊடகங்களும் பகை மறப்பிற்கும் நல்லிணக்கத்துக்கும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் தயங்குவது ஏன்?**

அவர்கள் தமது வர்க்க நிலைகளில் இருந்தும் இன, மத, சாதி பெருமித உணர்வுகளிலிருந்தும் நிலப் பிரபுத்துவ மனப்பாங்குகளில் இருந்தும் சிறு முதலாளித்துவ உணர்வுகளில் இருந்தும் சிந்திக்கிறார்கள். அனைத்து மாந்தர்கள், அவர்களின் தனித்துவங்கள், அபிலாசைகள், இவற்றை ஒன்றிணைத்து முன் செல்லும் கனவுகள் அவர்களிடம் இல்லை. இருக்காது.

எல்லோரும் ஒன்று என்று தேர்தல் காலங்களிலும் சில சிறப்பான நாட்களிலும் உதட்டால் கூறுவார்கள். ஆனால் மானசீகமாக இல்லை.

தீர்க்கதரிசனமும் ஆளுமையும் தூரதிருஷ்டியும் மானுட நேயமும் சமூகவாஞ்சையும் இதற்கு முன் நிபந்தனை.

இலங்கை பாழ்பட்டு வறுமை மிஞ்சி போய்க் கிடப்பதற்கு காரணம், இந்த சிறுமதியே என்றால் அது மிகையல்ல.

எமது அண்டை நாட்டில் காந்தி, நேரு, கான் அப்துல் கபார்கான், அம்பேத்கர், பெரியார், கஸ்தூரிபா, விஜயலட்சுமி, மணியம்மை போன்ற தலைவர்களும் ஆளுமைகளும் தாகூர், பாரதி, மைதிலி, சரண் குப்தா போன்ற கவிஞர்களும் இருந்தனர். துரதிர்ஷ்டவசமாக எமக்கு இவை அரிதாகவே அமைந்தன.

தெற்கிலும் வடக்கிலும் நிலவிய ஜனநாயக விரோத நிலமைகளும் இத்தகைய தலைமைத்துவங்கள் உருவாவதற்கான நிலைமைகளை இல்லாது ஒழித்தன. சிரச்சேதம் செய்தன

**போரும் பொருளாதார நெருக்கடியும் மக்களின் மனங்களிலும்அரசியல்வாதிகளின்மனதிலும்மாற்றங்களைஉருவாக்கவில்லை, பிரச்சினையைத் தீர்க்கும் வழிமுறையைப் பற்றிச் சிந்திக்க வைக்கவில்லை என்றால், அடுத்த கட்டம் என்ன?**

வரலாறு வெற்றிடத்தை விட்டு வைப்பதில்லை . 2022ல் பிரமாண்டமான பொது ஜன எழுச்சி ஒன்று ஏற்படும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

1970 களின் முற்பகுதியில் தெற்கிலும் 1980 களிலிருந்து 2009 வரை வடக்கில் போராட்டம், யுத்தம் வரும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை .

ஆளும் அரசியல் வர்க்கம் தானாகத் திருந்தும் என்று எதிர்பார்க்க முடியாது. சமூக அழுத்தத்தின் மீதுதான் மாற்றங்கள் நிகழ்கின்றன. வாழ்க்கை சகிக்க முடியாததாக மாறும்போது சமூகம் எழுச்சியுறும். அப்போது தூரதிருஷ்டியும் தீர்க்கதரிசனமும் உள்ள தலைமைத்துவம் உருவாக வேண்டும் .அதற்கு அதனிடம் மானுட நேயக் கொள்கைகள் வேண்டும். இல்லாவிடில் அராஜகமும் பேரழிவும்தான் ஏடறிந்த வரலாறு பூராவும் உள்ளன. காட்டுமிராண்டித்தனத்திற்கும் சர்வாதிகாரத்திற்கும் நாகரீகத்திற்கும் இடையிலான போராட்டத்தின் ஊடாகத்தான் மனித குலம் முன்னேறி வந்திருக்கிறது.

**தமிழ்க்கட்சிகளிடையே ஒற்றுமையைப் பற்றித் தொடர்ந்து பேசப்படுகிறது. தமிழ்த்தேசியவாதக் கட்சிகளோடும் சரி, அதற்கு வெளியே நிற்கும் நீங்கள் (தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி) சமத்துவக் கட்சி, புதிய ஜனநாயக மாக்ஸிஸ லெனினிஸக் கட்சி, கிழக்கில் உள்ள கட்சிகள் போன்றவற்றுடன் ஏன் ஒரு உடன்பாட்டுக்கு - மாற்று அணியொன்றின் உருவாக்கத்துக்குக் கை கோர்க்க முடியாது?**

உடன்பாடு என்பது கொள்கை வழிபட்டது. தவிர, குறிப்பிட்ட சில பிரச்சினைகள் தொடர்பாக, சமூக பொருளாதார அரசியல் விவகாரங்கள் தொடர்பாக, ஐக்கியமாகச் செயற்பட வேண்டும். ஒன்றிணைதல் என்பதை விட பரந்த ஐக்கிய முன்னணியே இங்கு முதன்மையான விடயம். எல்லாரும் ஒன்று சேர்தல் என்பது எதார்த்தமானதல்ல. இலங்கையின் தெற்கில் உள்ள ஜனநாயக முற்போக்கு சக்திகள், மலையக முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சக்திகள், இவை எல்லாவற்றுடனும் ஐக்கியம் ஒருங்கிணைவு வேண்டும். வேற்றுமையில் ஒற்றுமை காண வேண்டும்.

ஆனால் யாழ். மத்திய தரவர்க்க சிந்தனை ஆதிக்கம் நிறைந்த அரசியல் 'வானம் கிணற்றின் வாயளவு' என்ற சிந்தனை கொண்டது. தமிழ்த் தேசியப் புனிதர்கள் என்ற பாசாங்கும் இங்கிருந்துதான் நிகழ்கிறது. மற்றும் துரோகி - தியாகி வகையறாக்கள். இது முதலில் தகர்க்கப்பட வேண்டும். குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை என்ற மனநிலையுடன் அணுகுவதன் மூலம் மாத்திரமே பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும்.

வடக்கு -கிழக்கு பிரதேசத்தில் வாழும் நாம் அவிழ்த்து விடப்பட்ட நெல்லிக்காய் மூடை போல் வாழ்ந்து கொண்டு வீறாப்பு பேசுவோம். இந்தப் போலித்தனத்தை முதலில் கைவிட வேண்டும்.

**ஈ.பி.ஆர்.எல்.எவ்வுக்கென்றொரு வரலாற்றுப் பாத்திரமும் பங்களிப்பும் உண்டு. ஆயிரம் விமர்சனங்களுக்கு அப்பாலும் நெருக்கடிகளின் மத்தியில் ஈ.பி.ஆர்.எல்.எவ் எடுத்த மாகாணசபையே இன்று எஞ்சியிருக்கும் ஒன்று. ஆனால், இன்று அதை பிற சக்திகள் (தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு) தங்கள் கையில் எடுத்துள்ளன. இந்த நிலையில் மாகாணசபையை மீள உங்கள் தரப்பு கையெடுக்கக்கூடிய வாய்ப்புகள் உண்டா?**

அது எம்மை மாத்திரம் சார்ந்ததல்ல. சமூக எதார்த்த நிலைமைகள் சார்ந்தது. அதனை உருவாக்க எமது தோழர்கள் அர்ப்பணித்து இருக்கிறார்கள். வரலாறு முழுவதும் அது எங்கள் கையில் இருக்கும் என்று இல்லை. அது ஒரு குறிப்பிட்ட வரலாற்று பாத்திரம். அவ்வளவுதான். ஆனால் அதனைத் தொடர்ந்து முன்னெடுக்க வலியுறுத்துவோம். நிறைவேறுவது எவரூடாக இருந்தாலும் அதில் எமக்கு பெருமிதமே! ஆத்ம திருப்தியே!!

**பிளவுண்டிருக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வை ஒருங்கிணைக்க முடியாதா? ஏனென்றால் தமிழரசுக் கட்சிக்கு நிகரான அல்லது அதையும் விட வலிமையான தரப்பாக ஈ.பி.. ஆர்.எல்.எவ் உள்ளது. இன்று அரசியல் அரங்கில் உள்ள ஆளுமைகளில் ஈ.பி.ஆர்.எல்.எவ்வைச் சேர்ந்த நீங்கள், சுரேஸ் பிரேமச்சந்திரன், துரைரத்தினம், சந்திரகுமார், தவராஜா, சிவசக்தி ஆனந்தன், வரதராஜப்பெருமாள்,டக்ளஸ் தேவானந்தா, கோபாலகிருஸ்ணன் போன்றோர் முக்கியமானவர்களாக உள்ளனர். இவர்களிடையே ஒரு அரசியல் இணக்கப்பாடு ஏற்பட்டால் எத்தகைய மாற்றங்கள் நிகழும்?**

நாம் ஒரு பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள் என்பது சரி. ஆனால் இன்று எல்லோரும் ஒரு திசை என்றல்ல. விருப்பங்களுக்கும் எதார்த்தங்களுக்கும் இடையில் உள்ள இடைவெளி குறைய வேண்டும். விமர்சனம், சுய விமர்சனம் என்ற அடிப்படையிலானஉரையாடல் அவசியம்.

அது இந்த பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்களுக்கு மாத்திரமல்ல, சமூகப்பிரக்ஞையுடன் தம்மை அர்ப்பணித்த அனைத்து தரப்பினரையும் கரிசனை கொள்ள வேண்டும். இல்லாவிடில் அது கோஷ்டி வாதம் ஆகிவிடும்.

நாம் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகம், அனைத்து இலங்கையர்கள், உலகம் என்ற அடிக்கட்டுமானத்திலிருந்து சிந்தித்தால் பிரச்சனைகளுக்கு இலகுவாகவே தீர்வு காண முடியும். அவ்வாறு சிந்தித்தால் வலிமைமிக்க பரந்துபட்ட இயக்கம் ஒன்றை, முற்போக்கு ஜனநாயக இயக்கம் ஒன்றை கட்டி எழுப்ப முடியும்.

**போருக்குப் பிந்திய அரசியலை (Post War Politics) எப்படி முன்னெடுத்திருக்க வேண்டும்? இனியாவது அதை எப்படி முன்னெடுக்கலாம்?**

போருக்கு பிந்திய அரசியல் சாதாரணர்களின் கையிலிருந்து தமிழ் ஆளும் வர்க்கத்தின் கைகளுக்கு சென்று விட்டது. அதற்கு போர்க்காலத்திலேயே வழிவகை செய்யப்பட்டது. சாதாரணர் நிலையை முன்னிறுத்தி அர்ப்பணம், சமூக பிரக்ஞை, சகோதரத்துவ உணர்வு கொண்ட புதிய தலைமுறை செயற்பட வேண்டும்.

(22ஆம் பக்கம் பார்க்க)

# செந்தில் பாலாஜி கைது: ஊழலுக்கு எதிராக மகா ஊழல்

அ.பாக்கியம்

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான அமைச்சரவையில் மின்சாரம் மற்றும் எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு அமைச்சராக இருந்த(தற்போது இலாகா இல்லாத அமைச்சர்) செந்தில் பாலாஜி அமலாக்க துறையினரால் கைது செய்யப்பட்டது தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. திராவிட மாடல் ஆதரவாளர்களும், சங் பரிவார் சங்கிகளும் வலை தளங்களில் சகட்டுமேனிக்கு லாவணி கச்சேரி நடத்திக் கொண்டிருக்கின்றனர். இருந்தபோதிலும் செந்தில் பாலாஜி கைது, ஊழல் ஒழிப்பின் நடவடிக்கையா அல்லது அரசியல் உள்நோக்கம் கொண்டதா என்ற கேள்வி எழுகிறது. இதற்கான பதில், அரசியல் உள்நோக்கம் கொண்டது என்றே கூறவேண்டும்.

### மகா ஊழலின் மன்னர்கள்

ஊழல் ஒழிப்பு என்றால் பா.ஜ.க., ஊழலுக்கு அப்பாற்பட்ட கட்சியாக இருக்க வேண்டும். அல்லது ஊழலுக்கு எதிராகக் கொஞ்சமாவது நடுநிலையான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும். பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் ஊழல், நிர்வாகச் சீர்கேடு சந்திசிரித்துக் கொண்டு இருக்கிறது. எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் மீது ஊழல் புகார் சொல்வதும், அவர்கள் பா.ஜ.க.வில் இணைந்துவிட்டால் அவர்களுக்கு 'மிஸ்டர் கிளீன் 'சீட் கொடுப்பதையும் பா.ஜ.க.வழக்கமாக வைத்துக் கொண்டிருக்கிறது. நரகலை நடுவீட்டில் வைத்துக் கொண்டு இந்த யோக்கியர்கள் தூய்மை உபதேசம் செய்து கொண்டிருக்கி றார்கள். முதலில் பா.ஜ.க.வின் ஊழலை கணக்கில் எடுத்த பிறகு செந்தில் பாலாஜி விவகாரத்துக்கு வருவோம்.

பிரான்ஸ் நாட்டிடம் இருந்து ரபேல் விமானங்கள் வாங்குவதில் ஊழல் நடந்ததை பிரஞ்சு நாட்டு அதிகாரிகளே ஒப்புக் கொண்டார்கள். ஆனால், அந்த விவகாரத்தை நாடாளுமன்றத்தில் விவாதிக்க விடாமலேயே தடுத்து ஓடி ஒளிந்து கொண்டவர்கள்தான் பா.ஜ.க. பாக்கியவான்கள். தேர்தல் பத்திரம் என்ற பெயரால் கார்ப்பரேட் முதலாளியிடம் இருந்து பணம் வாங்குவதற்கு சட்டம் இயற்றி சுமார் 90% கார்ப்பரேட் முதலாளிகளிடமிருந்து பல நூறு கோடி ரூபாய் பணம் பா.ஜ.க.விற்கு சென்றுள்ளது. இதற்கு கைமாறாக கார்ப்பரேட் களவாணிகளான வேதாந்தா, அதானி, அம்பானி போன்ற முதலாளிகள் பலருக்கும் மிகப்பெரிய சலுகை வழங்கியது.

ஊழலை சட்டபூர்வமாக்கி, மோடி அரசு செய்த மிகப்பெரிய மோசடி தான் தேர்தல் பத்திரம். 2018 மற்றும் 2022க்கு இடையில் பா.ஜ.க.தான் அதிக அளவில் தேர்தல் பத்திரங்கள் மூலமான நன்கொடைகளைப் பெற்று, ரூ.5,270 கோடி பணமாக்கியுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் தேர்தல் பத்திரங்கள் மூலம் மொத்தம் ரூ.457 கோடி நன்கொடையாக வழங்கியுள்ளது வேதாந்தா. அதற்கு பிரதிபலனாக ஒரே ஆண்டில் 4 முக்கிய சுரங்கங்களை ஏலத்தில் கைப்பற்றி யுள்ளது வேதாந்தா நிறுவனம். தூத்துக்குடி ஸ்டெர்லைட் நிறுவனத்தின் தாய் நிறுவனம்தான் வேதாந்தா. இதற்குத்தான் தமிழகத்தின் ஆளுநர் ரவி வக்காலத்து வாங்கிக் கொண்டிருக்கிறார்.

மோடி அதிரடியாக அறிவித்த பண மதிப்பு நீக்கம் என்பது திட்டமிடப்பட்ட ஊழல் நடவடிக்கையாகும். பா.ஜ.க.வினரிடம் அவர்களின் ஆதரவாளர்களிடம் ஒட்டுமொத்த பணத்தையும் கொண்டு சேர்த்து, இந்திய அரசியலில் ஆதிக்கம் செலுத்துகிற சக்தியாக உள்ள பணத்தை தன் வசம் கொண்டு வந்து, அதன் மூலம் இந்திய அரசியலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையின் பிரதான பகுதிதான் பண மதிப்பு நீக்க நடவடிக்கையாகும். இதில் மத்திய ரிசர்வ் வங்கிக்கு வராமலேயே 2000 ரூபாய் நோட்டுகள் ஆயிரக்கணக்கான கோடி வெளியில் சென்றதை ஆதாரங்களுடன் பார்க்க முடியும். தமிழகத்தில் சேகர்ரெட்டி என்பவரிடம் பிடிபட்ட பல கோடி ரூ.2 ஆயிரம் நோட்டுக்கள் எங்கிருந்து வந்தன என்று ரிசர்வ் வங்கிக்கே தெரியவில்லையாம். அதனால் அந்தப் பணத்தை சேகர்ரெட்டிக்கே திருப்பி கொடுத்து விட்டார்கள். எல்லாம் அந்தத் திருப்பதி வெங்கடேசப் பெருமாளுக்கே வெளிச்சம். வங்கியில் பல ஆயிரம் கோடி ரூபா கடன் வாங்கிவிட்டு அவற்றைத் திருப்பிச் செலுத்தாமல் 90 பேருக்கு மேல் வெளிநாடு சென்று சொகுசு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் தவிர்ப்பது ஒன்றிய அரசின் உலகம் தழுவிய ஊழலுக்கான ஒத்தாசையாகும். பா.ஜ.க. ஆளும் மத்திய பிரதேசத்தில் மகாராஷ்டிராவில் நடைபெறக்கூடிய ஊழல்கள் எல்லாம் நாடறிந்தவை.

கர்நாடக மாநிலத்தில் 40 சதவீதம் கமிஷன் வாங்கும் அரசு என்று ஊழலுக்குப் பெயர் பெற்ற அரசாகத் திகழ்ந்ததால்தான் சமீபத்தில் நடந்த தேர்தலில் பா.ஜ.க. அரசு படுதோல்வி அடைந்தது. பா.ஜ.க.ஆளும் மாநிலங்களில் எல்லாம் ஒன்றிய அரசின் மத்திய ஏஜென்சிகள் தமது சுண்டு விரலைக்கூட அசைப்பதில்லை. எந்த மாநிலத்தில் தேர்தல் நடந்தாலும் அங்கு தேர்தல் கமிஷனோடு, எதிர்க்கட்சியினரை மிரட்டுவதற்காக சிபிஐ, வருமானவரித்துறை, அமலாக்கத்துறை, என்.ஐ.ஏ. உட்பட எல்லா மத்திய ஏஜென்சிகளையும் பா.ஜ.க. களத்தில் இறக்குவது தொடர்ந்து நடைபெறுகிறது. ஊழலுக்கு எதிரான நடவடிக்கை எடுக்கிறோம் என்று பா.ஜ.க. பேசுவது சாத்தான் வேதம் ஓதுவதைப் போலத்தான்.

### கடந்த கால காட்சிகள்

தமிழகத்தில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது ஒரு சில அமைச்சர்களை தவிர்த்து பலரின் மீதும் மத்திய அரசின் ஏஜென்சிகள் வழக்கு பதிவு செய்தன. அன்றைய தினம் தமிழகத்தின் தலைமைச் செயலகத்தில் அமலாக்கத்துறை தலைமைச் செயலாளர் ராம் மோகன் ராவ் அறையில் சோதனை நடத்தியது. அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மு.க.ஸ்டாலின், தலைமைச் செயலகத்தில் சோதனை நடத்தியதைக் கண்டித்தார். இன்று செந்தில் பாலாஜி அறையில் அமலாக்கத்துறை சோதனை நடத்திய பொழுது அ.தி.மு.க. தலைமை வரவேற்றது.

ராம் மோகன் ராவ் அறையிலும் வீட்டிலும் நடைபெற்ற சோதனையின் முடிவு என்ன ஆனது என்று இன்று வரை தெரியவில்லை. அ.தி.மு.க மந்திரிகள் மீது தொடுக்கப்பட்ட வழக்குகளை பா.ஜ.க. அரசியல் பேரம் பேசுவதற்கு வைத்துக் கொண்டதே தவிர இன்று வரை அதன் மீது எந்த நடவடிக்கையும் இல்லை.

மேற்கு வங்காளத்தில் பா.ஜ.க.வுடன் கடுமையாக மோதுகின்ற திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் மந்திரிகளைக் கைது செய்தார்கள். உத்தவ்தாக்கரே அரசியல் ரீதியாக வேறுபட்டவுடன் அவர் கட்சியின் தலைவர்கள் வீட்டில் அமலாக்கத்துறை ரெய்டு நடத்தியது. டெல்லி துணை முதலமைச்சர் உட்பட பலரையும் ஊழல் குற்றச்சாட்டுகள் என்ற பெயரால் வழக்கில் சிக்க வைத்தார்கள். முன்னாள் ஜம்மு காஷ்மீரின் கவர்னராக இருந்த சத்திய பால் மாலிக் ராணுவ வீரர்கள் மரணமடைந்த விஷயத்தில் ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் தொடர்பான உண்மைகளை வெளிப்படுத் தியதற்காக உடனடியாக அவரது வீட்டில் அமலாக்கத்துறை புகுந்து சோதனை நடத்தியது. பாரதிய ஜனதாக் கட்சி , அரசியல் ரீதியாக தங்களுக்கு எதிராக உள்ள மாநிலங்களின் மீது அமலாக்கத் துறையை, மத்திய புலனாய்வுத் துறையை பயன்படுத்துவதை ஒரு கொள்கை முடிவாகவே எடுத்து அமலாக்கி வருகிறது.

தற்போது பீகார் துணை முதலமைச்சர் மீது, தெலங்கானாவில் பி ஆர் எஸ் தலைவர், அந்த மாநில முதலமைச்சர் சந்திரசேகர ராவ் மகள் மீதும், கர்நாடக துணை முதலமைச்சர் சிவகுமார் மீதும் அமலாக்கத்துறை வழக்குகளைப் பதிவு செய்து அரசியல் தேவை வரும் பொழுது கைது செய்ய காத்திருக்கிறது. எனவே ஒன்றிய அரசும் பாஜகவும் செந்தில் பாலாஜியைக் கைது செய்திருப்பது ஊழலை ஒழிப்பதற்கான நடவடிக்கை அல்ல என்பது திட்ட வட்டமானது. உண்மையில் ஒன்றிய அரசு ஊழலை ஒழிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டிருந்தால் செந்தில் பாலாஜி மீது 1988 ஆம் ஆண்டு லஞ்ச தடுப்புச் சட்டம் மற்றும் பினாமி பரிவர்த்தனை தடைச் சட்டம் இவைகளின் அடிப்படையில் வழக்கைப் பதிவு செய்திருக்க வேண்டும். இதற்கு தொடர்பில்லாத மணி லாண்டரிங் சட்டத்தின் கீழ் வழக்கைப் பதிவு செய்திருப்பது பேரம் பேசுவதற்காக மட்டும்தான். இந்த மணிலாண்டரி சட்டம் போதைப் பொருள் கடத்தி இருந்தால் அதற்கு தான் அதிகமாகப் பொருந்தும். மற்றவை அனைத்தும் வருமான வரி தொடர்பானவை. எனவே அரசியல் பகடைக்காய் விளையாட்டிற்காக செந்தில் பாலாஜியை பயன்படுத்துகிறது பா.ஜ.க.

செந்தில் பாலாஜி நல்லவரா? கெட்டவரா? என்று கேட்டால் நாயகன் படத்தில் வரும் வேலு நாயக்கர் போல "தெரியலப்பா" என்று பதில் சொல்லமுடியாது. செந்தில் பாலாஜி அ.தி.மு.க. அமைச்சராக இருந்தபோது, அவர் மீது தி.மு.க. தலைமைதான் கடுமையான ஊழல் புகார்களை கூறியது. அரசியலில் பணம் செலவழித்து அதிகாரத்திற்கு வந்த பிறகு செலவழித்த பணத்தை பல நூறு மடங்காக சம்பாதித்து பணபலம், படைபலம் என செல்வாக்காகத் திரிவது என்பது புதிய கலாசாரமாகவே மாறிவிட்டது. அப்படிப்பட்டவர்தான் செந்தில் பாலாஜி. ஜெயலலிதா, சசிகலா, டிடிவி ஆதரவாளராக செயற்பட்ட செந்தில் பாலாஜியின் செல்வாக்கு தி.மு.க.வுக்கு தேவைப்பட்ட பொழுது, தன் செல்வாக்கை தக்க வைக்க வேண்டும் என்றால் அடுத்து ஆட்சிக்கு வர வாய்ப்புள்ள கட்சி தி.மு.க.தான் எனக் கருதி மீண்டும் தி.மு.க.வில் இணைந்தார். (இவர் அரசியலில் முதலில் காலடி வைத்த இடம் தி.மு.க.தான்).

இவர் ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் போக்குவரத்து துறை அமைச்சராக இருந்த பொழுது வேலை நியமனத்திற்கு லட்சக்கணக்கான ரூபாய் பணம் பெற்றுக் கொண்டு வேலை கொடுக்கவில்லை என்று 81 பேர் போலீசில் புகார் செய்தார்கள். பொலிஸார் வழக்குப் பதிவு செய்ய மறுத்ததால் நீதிமன்றத்தை அணுகி உத்தரவு பெற்று வழக்குப் பதிய வைத்தார்கள். அன்றைய அ.தி.மு.க. அரசு செந்தில் பாலாஜிக்கு ஆதரவாக இருந்தது. புகார் கொடுத்த பலரும் மிரட்டப்பட்டனர். தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு உயர்நீதிமன்றத்தில் அமைச்சர் செந்தில் பாலாஜி தரப்பில் போக்குவரத்து துறையில் வேலை கொடுக்க முடியாதவர்களுக்கு பணம் திருப்பிக் கொடுக்கப்பட்டு விட்டது ,எனவே வழக்கை திரும்பப் பெற வேண்டும் என்று வேண்டுகோள் வைக்கப்பட்டதை உயர் நீதிமன்றம் ஏற்று வழக்கை முடித்து வைத்தது.

பணம் கிடைக்காத சிலர் உச்ச நீதிமன்றத்திற்கு சென்றனர். வேலை கொடுப்பதற்கு பணம் வாங்கிக்கொண்டு வேலை கொடுத்தது லஞ்சம் ஆகாதா? பணத்தை திருப்பி கொடுத்து விட்டால் அது லஞ்ச நடைமுறை இல்லையா? என்று கேள்விகளை எழுப்பி வழக்கை தொடர்ந்து நடத்த வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பை ஒன்றிய நீதிமன்றம் அரசு தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி தி.மு.க.வை மிரட்ட நினைக்கிறது.

செந்தில் பாலாஜியின் மீது அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மு.க.ஸ்டாலின் கொடுத்த புகார் மீதுதானே நடவடிக்கை எடுக்கிறோம். இதற்குப் போய் குய்யோ முய்யோ என்று கத்துகிறார்களே என்று பா.ஜ.க. கேட்கிறது. வாஸ்தவம்தான். அப்படி என்றால் செந்தில் பாலாஜி மீது மட்டுமா அன்றைக்கு மு.க.ஸ்டாலின் புகார் கொடுத்தார்? அதிமுக அமைச்சர்கள் பலர் மீதும்தானே ஆளுநரிடம் புகார் கொடுத்தார்? அவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கேள்விக்கு பா.ஜ.க.வால் பதில் சொல்ல முடியாது.

செந்தில் பாலாஜி தமிழக முதலமைச்சருக்கு அதிகம் நெருக்கம் உள்ளவராகக் கருதப்படுகிறார். அதனால்தான் பா.ஜ.க. அவர் மீது குறி வைக்கிறது என்ற கருத்து பரவலாக உள்ளது. அ.தி.மு.க.வில் அவர் இருந்த பொழுது அன்றைய டாஸ்மாக் விற்பனையில் என்னென்ன முறைகேடு நடந்ததோ அதே தான் இன்றும் செந்தில் பாலாஜி துறையில் நடக்கிறது என்ற குற்றச்சாட்டு பரவலாக இருக்கிறது. சட்ட விரோத மதுபான பார்கள், 24 மணி நேரமும் டாஸ்மாக் மது தாராளமாக கிடைப்பது, ஒவ்வொரு பாட்டிலுக்கும் ரூ.10 அதிகமாக குடிமகன்களிடம் வசூலிக்கச் சொல்வது என்று செந்தில் பாலாஜி மீது கூறப்படும் குற்றச்சாட்டுகளின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், இதையெல்லாம் காரணம் காட்டி அமலாக்கத்துறை தற்போது எடுத்துள்ள நடவடிக்கையை நியாயப்படுத்த முடியாது. விசாரணை என்ற பெயரில் அவருக்கு நெஞ்சுவலி வர வைத்திருக்கிறார்கள். இதயத்தில் 4 அடைப்புகளை நீக்கி காவேரி மருத்துவமனையில் அவருக்கு பெரிய ஆபரேஷன் செய்திருக்கிறார்கள்.

### ஆளுநர் மீண்டும் மீண்டும் அத்துமீறல்

தமிழகத்தில் மட்டுமல்ல பா.ஜ.க.விற்கு அரசியல் ரீதியாக மாற்றாக உள்ள கட்சிகள் ஆளக்கூடிய மாநிலத்தில் ஆளுநர்கள் தலையீடு அத்துமீறிக் கொண்டிருக்கிறது. அதிலும் பா.ஜ.க.விற்கு கொள்கை ரீதியாகவும் எதிராக உள்ள கேரள இடதுமுன்னணி அரசாங்கத்தின் மீது, கேரள ஆளுநரும் மத்திய ஏஜென்சிகளும் கொடுக்கின்ற குடைச்சல் கொஞ்ச நஞ்சமல்ல - கொள்கை அடிப்படையிலும், மக்கள் ஆதரவாலும் அவற்றை எல்லாம் முறியடித்துக் கொண்டிருக்கிறது இடதுமுன்னணி அரசு. சனாதன ஆதரவாளரான தமிழக ஆளுநர் ரவி, முதல்வரின் அதிகார விஷயத்திலும் மூக்கை நுழைத்திருக்கிறார். செந்தில் பாலாஜியை இலாகா இல்லாத அமைச்சராக்க ஒப்புதல் தர மறுத்திருக்கிறார். மந்திரிகளின் இலாகாக்களை முடிவு செய்வது முதலமைச்சரின் உரிமையாகும். இதை அங்கீகரிக்க மறுப்பது மாநில நிர்வாகத்தில் ஆளுநரின் அதிகபட்ச அத்துமீறலாகும்.

செந்தில் பாலாஜி மீது அரசியல் நோக்கம் கொண்ட ஒரு நடவடிக்கை எடுக்கப்படும்போது, அதை காரணம் காட்டி, ஆளுநர் அமைச்சரவை மாற்றம் விவகாரத்தில் தலையிடுவது, மேலும் அந்த அரசியல் நோக்கத்தை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

செந்தில் பாலாஜியின் மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்கில் அவர் விசாரிக்கப்பட வேண்டியவர் என்பதில் திமு.க. உட்பட யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. அவரை அமலாக்கத்துறை கைது செய்வதற்காக எடுத்த முயற்சியும், நெஞ்சுவலியுடன் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த அவரை தங்கள் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வருவதற்காக காட்டிய தீவிரமும் அதற்கு பின்னால் இருக்கக்கூடிய பா.ஜ.க.வின் அரசியலை அம்பலப்படுத்துகிறது.

ஆளுங்கட்சியாக இருக்கிறபோது ஒருநிலைப்பாடும், எதிர்க்கட்சியாக இருக்கிறபோது ஒருநிலைப்பாடும் எடுப்பது தமிழகத்தில் இருதுருவ அரசியல் கலாசாரமாகவே மாறிவிட்டது. செந்தில்பாலாஜி விவகாரத்திலும் தற்போது தமிழகத்தில் அந்த சூழ்நிலைதான் நிலவுகிறது.


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்போர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284

# வேடங்கள் பலவிதம்

சியாமளா யோகேஸ்வரன்

சிறுகதை

அன்று விடிந்த பொழுதே வாசுகிக்கு நன்றாக இருக்கவில்லை. மேலதிகாரியிடம் சதா குற்றம் கேட்பதில், தான் ஒன்றுக்கும் இலாயக்கில்லாதவளோ என்ற எண்ணம் தோன்றத் தொடங்கி விட்டிருந்தது. இலங்கையில் படிப்பை முடித்தவளுக்கு அவுஸ் திரேலியாவில் வேலை கிடைப்பதைப் பற்றி நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. சரி, சுகமாக வீட்டில் இருந்து கொள்ளலாம் என்று நினைத்ததும் நடக்கவில்லை. வீட்டுச்செலவுகள் கண்டபடி எகிறத் தொடங்கிய போது வீட்டில் சண்டைகளும் 'முணுக்'கென்றவுடன் முளைவிடத் தொடங்கி விட்டிருந்தன. எடுத்ததற்கெல்லாம் கணக்குக் கேட்ட கணவனின் செயலுக்கு அர்த்தமிருந்தாலும், அது அடிக்கடி தன்மானத்தைத் தட்டிப் பார்க்கவே, வேலை தேடும் படலத்தில் தீவிரமாக இறங்கி விட்டிருந்தாள்.

எத்தனை வேலைத்தளங்களில் ஏறி இறங்கியிருப்பாள். எத்தனை நேர்முகத்தேர்வாளர்களைச் சந்தித்திருப்பாள் என்ற கணக்கு ஒரு கட்டத்தில் ஞாபகத்தின் எல்லைக் கணக்கைத் தாண்டி விட்டதுடன், தன்னம்பிக்கையும் தறிகெட்டு ஓடி விட்டிருந்தது. அரிச்சந்திரனுக்குப் பக்கத்து வீட்டுக்காரியாய் தேர்வுகளில் உண்மையை மட்டுமே பேசி வந்தவள், அது வேலைக்காகாது என்று ஒரு கட்டத்தில் புரிந்து கொண்டாள். அதற்குப் பிறகு தேர்வாளரின் கண்ணைப் பார்த்து, தாராளமாய் தனக்கு முன் அனுபவம் இருக்கின்றது என்பதாகப் பொய் பேசியதற்குப் பலனிருந்தது.

உடைத்தொழிற்சாலை ஒன்றில் வேலை கிடைத்து விட்டிருந்தது. அதை நம்புவதற்கே ஒரு நாள் முழுவதுமாய் எடுத்துக் கொண்டது. வேலைக்குப் போன ஒரே வாரத்தில் கணவனுக்கு இணையானவள் தான் என்ற பெருமித உணர்வு உள்ளுக்குள் முளை விட்டிருந்தது. பாதி வீட்டுவேலையை கணவனும் செய்ய வேண்டும் என்று எதிர்பார்த்தாள். உழைப்பவள் என்பதைத் தாராளமாகவே சொல்லிக் காட்டி வேலை வாங்கினாள். வார இறுதியில் சந்தித்த நண்பிகள் வேலைக்குப் போகின்றவள் என ஒரு மரி யாதையைக் கேட்காமலேயே கொடுத்தார்கள். அது கொடுத்த கர்வத்தையும் நன்றாகவே அனுபவித்தாள் வாசுகி.

ஆனால் ஒரு மாத காலத்துள் ஏன் வேலைக்குச் செல்வதற்கு ஆசைப்பட்டேன் என்னுமளவுக்கு வாழ்க்கையும், நேரமும் வாசுகியைத் தூக்கிப் பந்தாடின. வீட்டு வேலைகளை முடிக்க வேண்டும், சமைக்க வேண்டும், கடைக்குப் போக வேண்டும், பிள்ளைகளை வகுப்புக்குக் கூட்டிப் போக வேண்டும் என்று வேலைகள் ஒன்றுக்குப் பின் ஒன்றாகக் காத்து நின்றன. முன்பானால் மாலையில் சாப்பிடுவதற்கு என்று ஏதாவது செய்து வைப்பாள். மாலையில் வேலை முடிந்து வரும் கணவனும் பிள்ளைகளும் அவள் செய்து வைத்திருப்பதைத் தேடி எடுத்துச் சாப்பிடும் போது கிடைக்கும் நிறைவே தனி. இப்போதானால் நேரம் கிடைப்பதில்லை என்பதுடன், உடலும் மனதும் சோர்ந்து விடுகின்றன. பிள்ளைகளுக்குத் தெரிந்ததைப் பொறுமையுடன் சொல்லிக் கொடுக்க முடியாமல் கோபம் முந்திக் கொண்டு வந்து விடுகின்றது. ஒவ்வொரு நாளும் பாண் மட்டுமே விதவிதமாக உருக்கொண்டு பிள்ளைகளின் சாப்பாட்டுப் பெட்டிக்குள் புகுந்து கொள்கின்றது.

இது இப்படி என்றால் வேலை இன்னொரு ரகம். வேலைக்குச் சேர்ந்த புதிதில் வேலையில் நிலைக்க வேண்டும், நல்ல பெயரை வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் அத்தனை வேலையையும் பாய்ந்து பாய்ந்து செய்ததில் போகப் போக ஆப்பிழுத்த குரங்கின் நிலைக்குத் தள்ளப்பட்டாள். கூட வேலை செய்பவர்களை விட அதிக வேலை செய்வாள் என்ற எதிர்பார்ப்பைப் பொய்யாக்க முடியவில்லை. தேவைக்கு அதிகமாய் உழைத்ததில் களைத்தே போனாள். அதை விட மற்றவர்களுக்குக் கொடுக்கப்படும் மதிப்பு தனக்குக் கொடுக்கப்படுவதில்லை என்பது ஏமாற்றத்தையும் கொடுத்தது.

எத்தனையைச் செய்தாலும் திருப்தி அடைய மாட்டேன் என்று எதற்காவது குறை பிடித்துக் கொண்டிருக்கும் பெண் மேலதிகாரியைக் காணும் போதெல்லாம் உடல் தானாகவே நடுங்கத் தொடங்கியது. தரத்தை நிர்ணயிப்பதற்கான அதிகாரி என்ற வகையில் அந்தக் கம்பெனியில் வேலை செய்யும் அனைவரும் ருமேனிய நாட்டைச் சேர்ந்த அந்தப் பெண்மணியைக் கண்டால் பதுங்குவார்கள்.

வாசுகிக்கு வேலையில் நிலைத்து நிற்க வேண்டு மென்பதால் எதைச் சொன்னாலும் செய்யத் தயாராக இருந்தாள். அதைத் தனக்குச் சாதகமாகப் பாவித்துக் கொண்டு தன் வேலைகள் சிலதையும் இவள் தலையில் கட்டி விடுவாள். "ராட்சசி" என்று மனதுள் வைதபடியே போலியாக முகத்தில் புன்னகையைப் பூட்டிக் கொண்டு வேலை செய்வாள் வாசுகி.

அன்று வேலைப்பளு மிகவும் அதிகமாக இருந்தது. எல்லாவற்றையும் பொதி செய்து, அனுப்புவதற்குள் இடுப்பெலும்பு ஒடிந்து போய் விட்டிருந்தது. காலை உணவு இடைவேளைக்குப் போவதற்குக் கூட நேரம் கிடைக்கவில்லை. வெறும் வயிற்றுடன் தண்ணீரும் குடிக்காமல் இருந்ததில் தலைவலி வந்து கொண்டிருந்தது. அதற்குள் ருமேனியாப் பெண்மணி கூப்பிட்டார்.

"எல்லாவற்றையும் அனுப்பி விட்டாய் தானே?" கேள்வி கூட அதட்டலாகத் தான் வரும்.

"அனுப்பியாயிற்று."

"சிட்னி வாடிக்கையாளர் பெரிய சைஸ் உடுப்புக் கேட்டிருந்தார், அனுப்பியாயிற்று தானே?"

"இல்லையே, யாரும் எனக்குச் சொல்லவில்லை."

"மின்னஞ்சலில் அனுப்பியிருந்தேனே? வாசிக்க வில்லையா? அவசரமாக வேண்டும் என்று கேட்டிருந் தார்கள், இதற்கு மேல் அனுப்பவும் முடியாது. என்ன வேலை செய்கிறீர்கள்? வாடிக்கையாளர் எங்களுக்கெல்லாம் கடவுள் மாதிரி, எல்லாவற்றிலும் கவனம் இருக்க வேண்டும்." உறுமிய குரலில் கொட்டி விட்டு அல்லிராணி போய் விட்டாள்.

வாசுகிக்குக் கண்கள் கலங்கி விட்டன. இலகுவில் அழுது விடுவாள் என்பதால் பெற்றோரோ, கணவனோ கடிந்து கொள்வதேயில்லை. முதலாளி அப்படித்தான் என்று கூட வேலைசெய்பவர்கள் ஆறுதற்படுத்திய போதும் வாசுகிக்கு மனவருத்தம் போகவில்லை. அப்படி ஏதும் மின்னஞ்சல் வந்திருக்கவில்லை என்று அவளிடம் போய் நியாயம் சொல்லிக் கொண்டிருக்கவும் முடியவில்லை.

அந்த நிகழ்வுக்குப் பிறகு அவளுடன் வேலை செய்ப வர்கள், செய்த பிழைக்காக மட்டுமல்ல, செய்யாத பிழைகளுக்காகவும் அவ்வப்போது வாங்கிக் கட்டிக் கொள்வதைப் பார்க்கையில் ருமேனியா ராணி இயல் பிலேயே பொல்லாதவள் என்று புரிந்து கொண்டாள். அவளுக்கு "டிராகன்" என்றொரு செல்லப் பெயர் கூட இருந்தது. அவளுடைய கணவனை நினைத்து எல்லோ ரும் பரிதாபப்பட்டுக் கொண்டார்கள். எப்படித்தான் இவளுடன் வாழ்கின்றானோ? வாழ்நாள் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கின்றான் என்று முன் அறியாத அவளது கணவனுக்காக அனுதாபப்பட்டுக் கொண்டு பேச்சை முடிப்பார்கள்.

ஒருநாள் மாலை வேலை முடிந்து வருகையில் முன்னால் சக்கரத்தைப் பூட்டியவள் போன்ற வேகத்தில் 'டிராகன் லேடி' ஓடிக் கொண்டிருந்தாள். கண்டால் வம்பு. கூட வேலை செய்யும் தோழி ரெசி 'நேரத்துக்கு வேலை முடித்துக் கொண்டு ஓட வேண்டும் என்று கடிகாரத்தையே பார்த்துக் கொண்டிருப்பீர்களா என்று கேட்பாள்' எனச் சொல்லியிருந்ததில் பக்கத்திலிருந்த பேருந்து தரிப்பிட மறைவுக்குள் பதுங்கினாள்.

"ஆடியாடி நீ வரும் வரையில் நான் காத்திருக்க வேண்டுமா?" ருமேனியஅதிகாரிக்குப் பக்கத்தில் வந்து விட்ட மனிதன் மற்றவர்களுக்குக் கேட்காமல் அடிக்குரலில் கேட்டது வாசுகிக்கும் கேட்டது.

அவ்வளவுதான். டிராகன் நெருப்பைக் கக்கப் போகின்றது என்று காத்திருக்கையில்,

"சொறி வேலை முடியேல்லை." அல்லிராணியின் குரல் தாழ்ந்தே ஒலித்தது.

"சொறியை எல்லாவற்றுக்கும் சொல்லித் தப்பிக் கொள்ளாதே. நீ என் சொல்லைக் கேட்பதாகத் தெரிய வில்லை. நான் உன்னை உன்ர மகளின் வீட்டுக்குப் போகக் கூடாது என்று சொன்னனான். நீ போயிருக்கிறாய், என்னை ஏமாற்றலாம் என்று கனவிலும் நினைக்காதே. விருப்ப மென்றால் நீ உன்ர மகளோடயும் உன்ர மாஜி புருசனோ டயும் போய் இருக்கலாம். எனக்கு நீ வேணாம் என்று போய்க்கொண்டே இருப்பன்"

"அது! அவளுக்குக் காய்ச்சல்... அதுதான் போனனான். இனிப் போக மாட்டேன். அவ தன்ர பாட்டைத் தானே பார்க்கட்டும். எனக்கு நீங்கள் மட்டும் தானே?" அல்லிராணியின் குரலில் பயமும் நலிவும் ஒட்டியிருந்தன.

முன்னால் போகும் பருமனான மனிதனுக்குப் பின்னால், நாய்க்குட்டியாய் ஓடும் ருமேனிய அதி காரியையும், அலுவலகத்தில் அவளைப் பார்த்துப் பயந்து நடுங்கும் தம்மையும் நினைக்கையில் வாசுகிக்கு சிரிப்பு வந்தது.

ருமேனிய அல்லிராணி இப்போது இன்னொருவனுடன் வாழ்கின்றாள் என்பதும் முன்னையவனுக்குப் பிறந்த மகளைக் கொண்டாட முடியாமல் தவிக்கின்றாள் என்பதும் விளங்கியது. முதுமையின் தனிமைக்கு அஞ்சி, இந்த மனிதனுக்குப் பயந்து வாழும் அல்லிராணி, வேலையில் மற்றவர்களை அடக்கி ஆள்வதில் திருப்தி அடைகின்றாள் என்பதும் புரிந்தது. தமிழ்க் கலாசாரப்படி வளர்ந்த பெண்கள் கணவனுக்கு அடங்கியவர்கள் என்று வெளியில் சொல்லப்பட்டாலும், வீட்டில் அவர்கள் வைத்தது தான் எழுதப்படாத சட்டமாக இருக்கின்றது. அவர்கள் வெளி உலகுக்கு வந்தவுடன், கலாசாரப் பெண்மணிகள் என்ற முகமூடிக்குள் சௌகரியமாகப் பதுங்கிக் கொள்கின்றார்கள் என்பதையும், அதற்கு முரணான ருமேனிய அல்லிராணியின் உண்மை நிலையையும் ஒப்பிட்டுப் பார்த்ததில் வாய் விட்டுச் சிரித்தே விட்டாள் வாசுகி. பின்னால் வந்த சகதோழி ரெசி கேள்வியுடன் இவளைப் பார்க்கையில் அந்த சிரிப்பு இன்னமும் பெரிதாகியது. வேடங்கள் தான் எத்தனை விதம்?



எஸ்.எஸ். ஜோதிட நிலையம்

பண்டித்: தேஜா ஜி

PANDIT: TEJA JI

உலகப் பிரசித்தி பெற்ற இந்தியாவின் பரம்பரை கைரேகை ஜோதிடரைச் சந்தியுங்கள்.






100% சரியான கணிப்பு

- திருமண பாக்கியம்
- நீதிமன்ற வழக்குகள்
- குழந்தைகள் பிரச்சினை
- அதிர்ஷ்ட எண்கள்
- கல்வி விஷயங்கள்
- லக்ஷ்மி பூஜா
- வேலைப் பிரச்சினைகள்
- வஸ்து பூஜா
- வணிக சிக்கல்கள்
- அதிர்ஷ்ட கல்

என் தொழிலை எவராலும் உடைக்கவும் முடியாது. எனக்கு முன் எவராலும் வேலை செய்யவும் முடியாது. இது எனது சவால்.

எந்தவொரு சிக்கலையும் சரிசெய்யவும், உடைக்க முடியாத பாதுகாப்பை வழங்கவும் அவர் சக்திவாய்ந்த இந்திய பிரார்த்தனைகளை செய்கிறார்.

உலகப் பிரசித்தி பெற்ற இந்திய ஜோதிடர் பண்டித் தேஜா ஜீயைச் சந்தியுங்கள்.
உங்கள் தனிப்பட்டதோ, பொதுவானதோ அனைத்து வகையான பிரச்சினைகளையும் சில நாட்களிலேயே தீர்த்து வைப்பார்.

தீர்க்க முடியாத பிரச்சினைகளைத் தீர்த்து 100 வீதம் நம்பிக்கையை அவர் கொடுப்பார்.

சிறப்பான எதிர்காலத்துக்காக இன்றே வாருங்கள்

முற்பதிவுகளுக்கு அழையுங்கள்

0405075655

2a, chandler road, noble Park, 3174.


# ஒப்பந்தச் சட்டம்
# Law of contract

**சட்டத்தரணி - த.நா.ஜெயராசசிங்கம்**

இவர் முன்னாள் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட உதவி விரிவுரையாளர். பின்னர் பிரிட்டனில் சட்டம் பயின்று சட்டத்தரணியாகத் தேர்ச்சி பெற்றவர். பின் ஆஸ்திரேலியா மொனாஷ் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றார். அதன் பின்னர் ஆஸ்திரேலியா விக்ரோறியா மாநிலத்தில் வழக்கறிஞராகத் தகுதிபெற்றவர். தற்போது சட்டம் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்.




**ஒப்பந்தம் என்றால் என்ன?**

ஒப்பந்தம் என்றால் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்டவர்களுக்கிடையேயான சட்ட ரீதியாகக் கட்டுப்படுத்தப்படும் உறவுமுறை என வரைவிலக்கணப்படுத்தலாம்.

**ஒப்பந்தம் ஒன்றின் முக்கியமான அம்சங்கள் என்ன?**

A சட்ட முறையிலான உறவை உருவாக்கும் எண்ணம் (Intention to create Legal relationships)
B முன்மொழிவு (offer)
C ஏற்பு (Accepetence)
D வெகுமதி (consideration)
E Certenty of terms

A. முதலாவதான சட்ட ரீதியான உறவு-முறையை ஏற்படுத்தும் எண்ணம் என்பதை சிறிது விரிவாகப் பார்ப்போம்.

Intention to create leagal relationships

ஒருவர் நமது தோட்டத்தினைச் செப்பனிட்டுத்தருவதாகவும் நாம் அவருக்கு ஒரு மணித்தியாலத்துக்கு $25 தருவதாகவும் இணங்கினால் அது ஒரு சட்ட ரீதியான ஒப்பந்தம் ஆகும்.

குடும்ப உறவுக்கிடையே ஏற்படும் உடன்படிக்கைகளை ஒப்பந்தமாகக் கொள்ள முடியாது. உதாரணமாக பெற்றோர் பிள்ளைகளுக்கிடையே ஏற்படும் உறவு முறையிலான உடன்படிக்கை ஒரு ஒப்பந்தம் என ஏற்க முடியாது

B. இரண்டாவதாக முன்மொழிவு (offer) என்றால் என்ன எனப் பார்ப்போம்.

முன்மொழிபவர் offeror என அழைக்கப்படுவர். யாருக்கு ஒரு முன்மொழிவு செய்யப்பட்டதோ அவர் offerer என அழைக்கப்படுவார். ஒரு முன்மொழிவு ஆனது (offer) எழுதப்பட்ட அறிக்கையாகவோ அன்றி விடயம் மூலமான அறிக்கையாகவோ அல்லது ஒரு செயல் மூலமோ முன்மொழியப்படலாம்.

கட்டுப்படுத்தப்பட்ட ஒரு முன்மொழிவு எவருக்காகச் செய்யப்படுகின்றதோ அவருக்குத் தெரியப்படுத்தப்படல் வேண்டும். ஒரு முன்மொழிவு ஏற்கப்பட முன் திரும்பப் பெறப்பட முடியும். எனினும் திரும்பப் பெறல் தெளிவாகத் தெரியப்படுத்தப்படல் வேண்டும். (communicate)

பொதுவாக கொள்வனவு செய்யும் ஒருவர் தான் கொள்வனவு செய்யும் விருப்பத்தினை தெரிவிக்கின்றாரே தவிர அதற்கு மேலாக ஒன்றையும் செய்யவில்லை.

அதன் பின்னர் கடைச் சொந்தக்காரரர் அப்பொருளை விற்க விரும்புகிறார் எனவும் அந்த முன்மொழிவை ஏற்க விரும்புகிறார் எனவும் தீர்மானிப்பார்.(Sale the goods and accept the offer)

விலைப்பட்டி ஒரு பொருளில் இருந்தால் அது முன்மொழிவு அல்ல . அது பொருளை விற்பதற்கான அழைப்பு மட்டுமே.(Invitation to treat)

விற்பனைக்கான அழைப்பு (Invitation to treat) என்பது பொதுமக்களே ஒரு முன்மொழிவு செய்யும் படி கோருவதே ஆகும்.

எனவே ஒரு பல்பொருள் அங்காடி விலை குறிப்பிட்டபடி பொருட்களை விற்க வேண்டிய தேவைப்பாடு சட்டப்படி இல்லாவிடினும் பொதுவாக அவர்கள் நல்ல வியாபார உறவுமுறையைப் பேணுவதற்காக குறிப்பிட்ட விலையில் பொருட்களை விற்பர்.

(தொடரும்)

# மாதக ராசிபலன்



## மேடம்

தீவிர உழைப்பும், அதிக முயற்சிகளுடனும் காரியங்களில் ஈடுபடும் மேஷ ராசியினரே, இந்த மாதம் நல்ல பலன்களைப் பெறப் போகிறீர்கள். மனம் மகிழும் சம்பவங்கள் நடக்கும். மனக் கவலை குறையும். எல்லா வகையிலும் சாதகமான பலன் கிடைக்கப் பெறுவீர்கள். சற்றுக் கூடுதலாக எதிலும் கவனம் செலுத்துவது நல்லது.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலைச் சந்திக்க வேண்டி வரும். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் மனம் விட்டுப் பேசுவதன் மூலம் இடைவெளி குறையும். கலைத் துறையினருக்கு தொழில் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத் திடுவீர்கள்.

## இடபம்

பிரச்சினைகள் மற்றும் விவகாரங்களில் தீர ஆலோசனைகளைச் செய்து பக்குவமான அணுகுமுறையால் வெற்றி காணும் ரிஷப ராசியினரே, இந்த மாதம் நல்ல யோகமான பலன்களைப் பெறப் போகிறீர்கள். பணவரத்து அதிகரிக்கும். மனதில் ஏதாவது ஒரு கவலை உண்டாகும். சொத்துக்கள் சம்பந்தமான காரிய அனுகூலம் ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாகச் செயற்படுவது நல்லது. வேலை பார்க்கும் இடத்தில் பொருள்களைக் கவனமாக, பாதுகாப்பாக வைப்பது நல்லது. குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். கணவன், மனை விக்கிடையே உறவு பலப்படும். கலைத் துறையினருக்கு தொழில் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள்.

## மிதுனம்

கிடைத்த வாய்ப்பைத் தவறவிடாமல் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் திறமை உடைய மிதுன ராசியினரே ,இந்த மாதம் வழக்கு சம்பந்தமான விஷயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். பயணங்கள் செல்ல நேரிடலாம். மனத்திருப்தியுடன் செயலாற்றுவீர்கள். புத்திசாதுரியம் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதன் மூலம் மற்றவர்களிடம் மதிப்புக் கூடும், பாராட்டுக் கிடைக்கும் . கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். குடும்பத்துடன் விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் சூழ்நிலை வரும். கலைத்துறையினருக்கு எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும்.

## கடகம்

கடக ராசியினரே ,இந்த மாதம் எடுத்த காரியத்தை எப்படியும் செய்து முடித்து விடுவீர்கள். சுபச் செலவுகள் ஏற்படும். வேலை காரணமாக வீட்டை விட்டு வெளியில் தங்க நேரலாம். பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். வாகன யோகம் உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் புத்தி சாதுரியத்தால் மேலதிகாரிகள் கொடுத்த வேலையைச் சிறப்பாகச் செய்து முடிப்பார்கள். குடும்பத்தில் இருந்த குழப்பம் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் நீங்கும். கலைத்துறையினர் யதார்த்தமான படைப்புகளால் அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பார்கள்.

## சிம்மம்

உங்களது பணிகளை அடுத்தவரிடம் ஒப்படைக்காமல் நேரடியாகச் செய்யும் குணமுடைய சிம்ம ராசியினரே ,இந்த மாதம் எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். தனலாபம் கிட்டும். அடுத்தவர்களுக்கு உதவுவதில் ஆர்வம் காட்டுவீர்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும் தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புத்தி சாதுரியத்தால் வேலைகளைத் திறமையாகச் செய்து முடித்து பாராட்டு பெறுவீர்கள். குடும்பத்தில் நிம்மதி காணப் படும். . கலைத்துறையினரின் படைப்புகளுக்கு மதிப்பு, மரியாதை கூடும். நல்ல வரவேற்பு கிடைக்கும். உங்களது கலைத்திறன் வளரும்.

## கன்னி

எந்த ஒரு வேலையையும் மிகவும் பொறுமையாகவும், பொறுப்புடனும் செய்து முடிக்கும் கன்னி ராசியினரே, இந்த மாதம் எல்லாக் காரியங்களும் அனுகூலமாக நடந்து முடியும். முக்கியமான நபர்களின் உதவி கிடைக்கும். எதிர்பார்த்த தகவல்கள் நல்லதாக வரும். அந்தஸ்தும் உயரும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு வெற்றி பெறுவார்கள். குடும்பத்தில் குதூகலமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி கூடும். கலைத்துறையினர் மூத்த கலைஞர்களால் ஆதாயமடைவர். பழைய நிறுவனத்தி லிருந்து புதிய வாய்ப்புத் தேடிவரும்.

## துலாம்

துணிச்சலாக காரியங்களில் ஈடுபடும் அதே நேரத்தில் நியாயமாகவும், நேர்மை யாகவும் அதனை செய்து முடிக்கும் குணமுடைய துலா ராசியினரே ,இந்தக் காலகட்டத்தில் வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படும். மனதில் மகிழ்ச்சி ஏற்படும்படியான காரியங்கள் நடக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் உண்டாகும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். குடும்பத்தில் சந்தோஷமான நிலை காணப்படும். கணவன், மனைவிக் கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். கலைத்துறையினர் புதிய வாய்ப்புகளில் வெற்றி அடைவர்.

## விருச்சிகம்

எந்த ஒரு விஷயத்திலும் அவசரம் காட்டினாலும் அதே நேரத்தில் அதில் உள்ள நன்மை –தீமைகள் பற்றி ஆலோசித்து முடிவு எடுக்கும் விருச்சிக ராசியினரே ,இந்த மாதம் வீடு – மனை – வாகனம் சம்பந்தமான காரியங்களில் எதிர்பார்த்த பலன்கள் கிட்டும். காரியத்தடை, தாமதம் ஏற்படும். எதிர்பார்த்தபடி எதுவும் நடக்காமல் இழுபறியாக இருக்கும். ஆனாலும் மனம் மகிழும்படியாக எல்லாம் நடந்து முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகம் தொடர்பான பயணம் செல்ல வேண்டி இருக்கலாம். குடும்பத்தில் இருந்து வந்த மனம் நோகும் படியான சூழ்நிலைகள் மாறும். கலைத்துறையினர் புதுமையான சில படைப்புகளை வெளியிட்டு அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பர்.

## தனுசு

எந்த நேரத்திலும் தகுதி குறையாமல் செயற்படும் தனுசு ராசியினரே ,நீங்கள் உயர்ந்த எண்ணங்களை உடையவர்கள். இந்த மாதம் பேச்சின் இனிமையால் காரியம் கைகூடும். சுப பலன்கள் ஏற்படும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். ஆனாலும் எதிலும் கூடுதல் கவனத்துடன் செயற்படுவது நல்லது. தொழில் வியாபாரம் திருப்தியாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக வேலையாக அலைய வேண்டி இருக்கும். கணவன் மனைவிக்கிடையே இருந்த இடைவெளி குறையும். குடும்பத்தினருடன் ஆன்மிகப் பயணம் செல்லும் நிலை உருவாகும். கலைத்துறையினருக்கு வெளிநாட்டு புது நிறுவனங்கள் உங்களுக்கு வாய்ப்பளிக்கும். அயராத உழைப்பால் சில நுணுக்கங்களைக் கற்றுக்கொள்வீர்கள்.

## மகரம்

எத்தனை தடைவந்தாலும் எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் பின்வாங்காத மகர ராசியினரே, இந்த மாதம் நன்மை வரும். எல்லாவகையிலும் நல்லதே நடக்கும். அனுகூலமான பலன் உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். எதிர்ப்புகள் விலகும். விரும்பிய காரியங்களைச் செய்து சாதகமான பலன் கிடைக்கப்பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கப்பெறுவார்கள். பணி நிமித்தமாக வெளிநாடு செல்ல வேண்டி வரும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். கணவன், மனைவிக்கிடையே அன்பு அதிகரிக்கும். பிள்ளைகள் உங்கள் சொல்படி நடப்பது மனதுக்கு திருப்தி தரும். கலைத்துறையினரின் படைப்புத் திறன் வளரும்.

## கும்பம்

எந்தக் காரியம் செய்தாலும் அதில் முன்னேற்றம் காண வேண்டும் என்ற ஆர்வம் உடைய கும்பராசியினரே, நீங்கள் உழைப்ப தற்கு அஞ்சாதவர். இந்த மாதம் நல்ல பலன்களைப் பெறுவதில் சிரமம் இருக்காது. வீணாக மனதை உறுத்திக் கொண்டிருந்த கவலை நீங்கும். எவ்வளவு திறமையுடன் செயற்பட்டாலும் காரியத் தடங்கல் ஏற்படலாம் உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான பணிகளில் முழுமூச்சுடன் செயற்பட்டு முன்னேற்றம் காண்பார்கள். பயணங்களின் போது உடமைகளைக் கவனமாக, பாதுகாப்பாக வைப்பது நல்லது. குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மன வருத்தம் நீங்கும். கலைத்துறையினருக்கு பணவரத்து இருக்கும்.

## மீனம்

குடும்பத்தில் அக்கறை காட்டும் மீன ராசியினரே, நீங்கள் கவலை, பயம் இல்லாமல் செயற்படக்கூடியவர். எல்லா விஷயத்திற்கும் மனசாட்சியை நம்புபவர். இந்த மாதம் உங்களுக்கு நல்ல பலனை அள்ளித்தரும் நிலையில் இருக்கிறது. நீண்ட நாட்களாக இருந்து வந்த உடல் உபாதை மறையும். எல்லாவற்றிலும் இருந்து வந்த மனக்கவலை நீங்கும். வாகனத்தில் செல்லும் போது எச்சரிக்கை தேவை. தொழில் வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். உழைப்புக்கு ஏற்ற பலன் தாமதமாகக் கிடைக்கும். கலைத்துறையின ரின் படைப்புகளுக்கு மதிப்பு, மரியாதை கூடும்.

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



## ஊழிக்காலம்-2 46



# புயலுக்குப்பின்...

தண்டனை வழங்கப்பட்டவன், தனக்கு தண்டனைக்காலம் ஒரு வருடமோ, பத்து வருடமோ, தண்டனை முடிந்ததும் என்ன என்பதைத் திட்டமிட முடியும். உங்களுக்கு அப்படியுமில்லை, அதுவே பெரிய மன அழுத்தத்தைக் கொடுக்கும்." என்று தீர்வு காணப்படாத பிரச்சினைகளைக் கேட்டு என்ன செய்யப்போகிறார். இந்த உளவளத்துணை நிபுணர், தன்னையும் ஏமாற்றி பிள்ளைகளையும் ஏமாற்றுகின்றார்.

பார்வதியால் அப்படித்தான் சிந்திக்க முடிந்தது. பார்வதியை அந்தக் குவியலில் கண்ட மருத்தவர்.

"அம்மா நீங்க ஏன் இதில.?"

"நானும் இயக்கம் தான்"

"ஏன் உங்களையும் பிடிச்சுக் கொண்டு போனவங்களா?"

"இல்ல,நாங்க விரும்பிப் போனனாங்கள்"

"இந்த வயசிலயா..?"

"ம்.. இப்படிக் கனபேர் இருக்கிறம். எல்லாரும் பிடிச்ச ஆக்களும் இல்லை,சின்னப்பிள்ளைகளும் இல்லை."

அவர் உடனே திரும்பி பிள்ளைகளின் வயதைக் கேட்டார். பெண்கள் வயதைச் சொல்வார்களா..? அவராக வயதைக் கூற ஆரம்பித்தார்.. ஒவ்வொருவராக சுட்டி,

பதின் மூன்று - இல்லை

பதின் நாலு - இல்லை

பதினைந்து - இல்லை

அப்ப எல்லாம் பதினெட்டுக்கு மேலயா? அப்ப பெரியாக்கள்.

பாவம், குழந்தைப் பிள்ளையளுக்கு வகுப்பெடுக்க வந்திருக்கிறார் போல என பிள்ளைகள் தமக்குள் பேசிக் கொண்டனர். இரவு இந்த வகுப்பின் எதிரொலி பரவலாக காணப்பட்டது.

"டியேய், உனக்கு நெடுக தலையிடி என்றாய், அது இதுதான் போல"

"ஏதோ கடிக்குதெண்டாய் அது இதுக்குத்தான்"

"இஞ்சே, இஞ்சே நித்திரை வரேல்ல ராவில எண்டு சொன்னாயெல்லோ.இப்பதான் விளங்குது."

"இவளொருத்தி, பகல் முழுக்க நித்திரை கொண்டா. ரா நித்திரை வராதுதானே"

மொத்தத்தில் பிள்ளைகளுக்கு மன நோய் ஆரம்பமாகிவிட்டது என்பதை மறுக்க முடியாது. காலை எழுந்தவுடன் படிப்பு பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு மாலை முழுவதும் விளையாட்டு என்று வழக்கப்படுத்தியிருந்தது இந்த முகாம்.

காலையில அபிராமி அந்தாதி முன் பக்கமிருந்த துர்க்கையம்மன் கோவிலிலிருந்து ஒலித்து இந்த முகாமின் பகுதிகளை நிறைத்தது. இன்று சித்திராபூரணை. சிலர் விரதமிருந்தனர். பார்வதி விரதம் இருக்கவில்லை, வீட்டில் மருமகன்,மருமகள் என்போர் விரதம் பிடிப்பார்கள், அது போதும் என்றிருந்துவிட்டாள்.

இன்றுடன் இந்த முகாமுக்கு இவர்கள் வந்து ஒரு மாதம் முடிவடைகின்றது. இங்கே பிள்ளைகளைக் கொண்டு வந்தாலும் எந்தத் தொழிற்பயிற்சியும் நடைபெறவில்லை. ஆயினும் வாகனங்களில் யார் யாரோ வந்து போனார்கள். பிள்ளைகளை அழைத்துப் போவார்கள்.

அவர்கள் வந்து தாம் ஏன் அழைக்கப் பட்டோம் என்பதைச் சொல்வார்கள் அந்த வகையில் இரண்டொரு தொலைக்காட்சி நிறுவனங்களிலிருந்து வந்தவர்கள் படிக்கும் பிள்ளைகளில் சிலரை பேட்டி எடுத்தார்கள்.

ஒரு சினிமா நடிகை தன் குழுவுடன் வந்து கலையில் ஆர்வமுள்ளவர்களைத் தெரிவு செய்து எடுத்தாள். ஏறக்குறைய இருபத்தைந்து பிள்ளைகள் அந்தக் குழுவில் சேர்க்கப்பட்டனர். இதில் கல்வி கற்போரும் இருந்தனர்.

கிழவி மேஜர் இவர்களை அழைத்து புத்திமதி கூறினாள். "ஆட்டம்பாட்டு எல்லாம் இஞ்சயோட சரி. படிப்பு நீங்க வாழும் வரை உதவும். இன்னும் சில மாதங்களில் பரீட்சை வருகிறது. படிக்கிற வழியப் பாருங்க. நீங்க படிச்சு எனக்கு தாறதில்லை"இதையெல்லாம் பார்வதிதான் மொழிபெயர்த்தாள்.

முடிவில் சில பெண்கள் படிப்பை ஏற்றனர். இரு பெண்கள் பிடிவாதமாக நாடகக் குழுவுக்கு சென்றனர். மேலும் சில மாதங்களின் பின் பேசியல் பழகுவதற்காக பதினாறு பிள்ளைகள் தேர்வு செய்யப்பட்டனர். அதற்கான ஆசிரியை வந்து போனார்.

செட்டிகுளத்திலேயே கணனி பழகுவதற்காக தேர்வு செய்யப்பட்ட இருபது பிள்ளைகளுக்கும் வகுப்பு நடாத்த கணனிகளுடன் ஒரு நிறுவனம் வந்தது. மூன்று மணி நேர வகுப்பு .ஒரு பதினைந்து நாட்களில் இந்த வகுப்புக்கள் அனைத்தும் முடிந்தன.

மே தினத்தன்று எல்லோருக்கும் விடுமுறை. பார்வதி முன்னர் குறிப்பிட்ட எந்த நிகழ்ச்சிகளிலும் பயிற்சிகளிலும் இணைந்து கொள்ளவில்லை. மே தினத்தன்று கப்டன் யூடி அவளது அறைக்கு வந்தாள். பார்வதியுடன் அவளுக்கான நட்பு பம்பமடுவில் ஆரம்பித்தது. பின்னர் செட்டிகுளம் முகாமுக்கு கொண்டு போய்விட்டனர். பின் பூந்தோட்டம் முகாமுக்கு சென்ற வாரம் இவள் வந்திருந்தாள். அதுவரை இருந்த வயோதிப மேஜர் விடுப்பில் போய்விட்டாள். அதனால் இவள் வந்திருந்தாள்.

உள்ளே நுழையாமல் வாசலில் நின்று "அம்மா! வாங்க, படம் பாப்பம், நல்ல கொப்பி வந்திருக்கு" என்றாள்.

ஏனைய முகாம்கள் போலன்றி இங்கே அலுவலகத்தின் கீழுள்ள மண்டபத்துக்கே படம் பார்க்கப் போகவேண்டும். ஆனால் பார்வதி போவதில்லை, இப்போது இந்தப் பெண் கேட்கிறாள். வேறு வழியின்றி புறப்பட்டுப்போனாள்.

முக்கியமான இடங்களில் "என்ன பேசுறாங்க" என்பாள். பார்வதி அதை சுருக்கமாக கூறுவாள். அனுஸ்கா நடித்த "அருந்ததி" . இதை பார்வதி ஏற்கனவே பாத்திருந்தாள். அன்றிருந்த மன நிலையில் இது அவளுக்கு பிடிக்காத படம். இடையிலே எழுந்து போய்விட்டாள். இன்று பொறுமையாகப் பார்த்தபோது நல்ல படமாகத் தெரிந்தது. அது முடிந்ததும் விஜய் நடித்த 'ஆதி படம்.

இரண்டையும் முடித்து வந்த போது மாலை உணவுக்கான நேரம் வந்து விட்டது. கவிதா அழகிய சிறு பையொன்றைப் பின்னிக் கொண்டிருந்தாள்.

"ஏன் எண்டு கேக்கேல்ல.?" என்று பார்வதியை கேட்டாள். பார்வதி.

"அதை கையில் பிடித்துப் பார்த்தனண்டா சொல்லுவன்." என்றாள். கவிதா அதை கொடுத்தாள்

"ப்பூ செல்போன் வைக்கிற பை"

"ம்! அக்கா நாளண்டைக்கு வருவாதானே?

"ம!அட நாளைக்கு அவளுக்கு பிறந்த நாள். அவளுக்கு நினைவிருக்கோ தெரியாது"

"அது தான் நான் இதை அவட்ட கொடுக்கப் போறன்." என்ற கவிதா மும்முரமாகப் பின்னினாள்.

பார்வதி கொப்பியை எடுத்து எழுத ஆரம்பித்தாள். அன்றாடம் தினக்குறிப்பு எழுதிச் சேகரித்தாள். ஒவ்வொரு நிமிடத்தையும் வீணாக்க அவள் விரும்பவில்லை.

"நாளைய நாள் என்ன நடக்கும் என்பது யாருக்கும் தெரியாது. நேற்று நடந்தவைகள் திரும்பப் போவதில்லை. இன்றைய நாள் எம்மிடமுள்ள பெரிய சொத்து. இதை நல்ல வண்ணம் செலவிடு" எங்கோ படித்த பொன்மொழி.

ம்!!!. நாம் செலவிட்டாலும், செலவிடாவிட்டாலும் செலவழிந்துதான் போகும் நாட்கள். செலவழிந்துபோகும் ஒவ்வொரு நாட்களும் வாழ்க்கையின் பாடங்களைத் தந்துகொண்டு தான் இருக்கின்றன.

அந்த முகாமின் பொறுப்பாளராக இருந்தவர் ஒரு மேஜர். சிவந்த குள்ளமான தோற்றம். தமிழ் பேசமட்டுமல்ல தமிழ் வாசிக்கவும் கற்றிருந்தார். அவரிடம் போய் பார்வதி எழுதுவதாக யாரோ கூறியுள்ளார்கள்.

ஒரு காலைப்பொழுதில் லைன் முடித்து அறைக்கு திரும்பும் போது அவன் "அம்மா ஒரு நிமிடம் " என்று பார்வதியை அழைத்தான். பார்வதி அவனை நோக்கிச் சென்றாள்.

"அம்மா கொஞ்சம் ஓவீசுக்கு வாறீங்களா? கொஞ்சம் பேசணும்"

பார்வதி பதில் பேசாமல் பின் தொடர்ந்தாள். அவனது அலுவலக அறை விசாலமாக இருந்தது. இரண்டு பேர் தத்தம் மேசைகளில் வேலை செய்து கொண்டிருந்தனர். மேஜர் மூலையில் கொஞ்சம் விசாலமான மேசையில் பின் உள்ள கதிரையில் அமர்ந்தவாறே மேசையின் முன்னேயிருந்த கதிரையில் அவளை இருக்கும் படி கூறினார்.

"அம்மா சொல்லுங்கம்மா. உங்களப்பற்றி சொல்லுங்க.."

"என்னைப்பற்றியா?" பார்வதி வியப்போடு கேட்டாள்.

"ம்! உங்களுக்கு கலியாணம் ஆகிற்றுதா? பிள்ளைகள் இருக்கிறாங்களா..?"

"ங்!. இருக்கிறார், படுக்கையில்"

"பிள்ளைகள்..?"

"எல்லோரும் கலியாணம் செய்திட்டினம்"

குடும்பத்தினரை ஒவ்வொருவராக விசாரித்து முடித்தவர். தொடர்ந்து 'லங்கா புவத்' பாணியில் விடைகளமைந்த கேள்விகளைப்போட்டு, அப்படித்தானோ, எனக்கூற பார்வதி ஆம்,அல்லது இல்லை என்பதையே பதிலாகக் கொடுத்தாள்.

" இங்கே உள்ள ஒவ்வொருவரைப்பற்றியும் நான் அறிஞ்சு வச்சிருக்கிறன். இப்படித்தான் பேசிப்பேசி."

"இப்படிப்பேசினாத்தான் எவ்வளவோ விபரங்களை எடுத்திரலாமே!' பார்வதி மனதுக்குள் எண்ணியதையெல்லாம் வெளியே சொல்ல முடியவில்லை.

"சரி நீங்க வயசு கூட,இங்குள்ளவங்க முப்பது வயதுக்கும் கீழ உங்களுக்கு அவங்களால பிரச்சனையில்லையா..?"

"இல்ல, பம்பமடுவில எனக்கு தனிக் கொட்டில், செட்டிகுளத்திலும் தனிவீடுதான், இங்கயும் தனி அறைதான். பிள்ளைகள் அன்பாயிருக்கினம்."

"இதுக்கு முதல் ஒரு எம்பத்திநாலு வயது ஒருவர் இங்க வந்து எப்பவும் முறைப்பாடு. கல்லெறியுறாங்கள், நெளிக்குறாங்கள், என்றும் எனக்கு வெத்தில பாக்கு வேணும் ஏற்பாடு செய்து தாங்க எண்டும் எப்பவும் கரைச்சல். பொறவு சமாளிக்க சொல்லி அனுப்புவன்."முன்னர் இது ஆண்களை வைத்திருந்த முகாம். அவர்களைப்பற்றித்தான் சொல்கிறார் எனப் பார்வதி புரிந்த கொண்டாலும், எண்பத்து நாலு வயதில் வெற்றிலை போடும் பழக்கமுள்ள யாரையும் அவள் அறிந்திருக்கவில்லை. 'யாரும் வழிகாட்டி, பண்ணையாள் என உள் வேலைகளில் இருந்திருப்பாரோ.., அல்லது இவர் எனக்கு கதை போட்டு கதை எடுக்கிறாரோ? நான் வாயைத் திறப்பதில் கவனமாக இருக்க வேணும்' பார்வதி தலையை மட்டும் அசைத்துக் கொண்டிருந்தாள்.

"இங்கு எல்லாரும் எங்களுக்கு சமம். எங்களிடம் பகை இல்லை. நீங்களும் அப்படியே எங்களோட புழங்கினா மகிழ்ச்சி. அரசாங்கம் அதைத்தான் விரும்புது. நீங்க போகேக்க பிறீயா கெட்ட காலங்களை மறந்து மகிழ்ச்சியோட போகவேணும். அதுக்காகத்தான் நாங்கள் உழைக்கிறம். சரீம்மா நீங்க போங்க நன்றி"

# தமிழ் பேசும் மக்களின் தற்காப்பு நிலையே மாகாணசபை!

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த காலத்தின் அனுபவங்கள் பாடமாக எடுத்துக் கொள்ளப்படவேண்டும்.

**ஆட்சி மாற்றத்தையும் (ஆட்சிப் பண்பில் மாற்றம் நிகழ்த்தப்பட வேண்டும்) புதிய ஆட்சி உருவாக்கத்தையும் அரகலயப் போராட்டம் உணர்த்தியது. மக்களின் மனங்களிலும் மக்களுடைய நிலவரங்களிலும் இதை உணரலாம். ஆனால், இதைச் சாத்தியப்படுத்துவதற்கு உள்நாட்டிலும் வெளியிலும் தடைகள் உள்ளனவே?**

அரகலய எழுச்சி இலங்கையர்களின் வாழ்வைச் செம்மைப் படுத்துவதற்கு நிகழ்ந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வு.

ஆளும் வர்க்கமும் ஏகாதிபத்திய சக்திகளும் எந்த சமூக எழுச்சியிலும் அதை நீர்த்துப்போக செய்வதிலும் முறியடிப்பதிலும் கரிசனையாக இருக்கவே செய்யும். சமூக மாற்றத்தை விரும்புபவர்கள் தட்டையாகச் சிந்திக்க முடியாது. சர்வதேச உள்ளூர், சமூக, பொருளாதார சக்திகளை விளங்கிக் கொள்ள வேண்டும் .மூலோபாயம், தந்திரோபாயம் போன்ற விடயங்கள் இருக்கின்றன. குறிப்பிட்ட சூழ்நிலைகளில் நண்பர்கள் யார், எதிரிகள் யார் என்ற மதிப்பீடு வேண்டும். புவிசார் எதார்த்தங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இலங்கையின் மதவாத ,இனவாத மேலாதிக்க நலன்களில் இருந்து சிந்தித்து எந்த எழுச்சியும் வெற்றி பெற முடியாது. அக்டோபர் எழுச்சி மக்களுக்கு ரொட்டியையும் உலகத்தில் சமாதானத்தையும் தேசங்களுக்கு உரிமையையும் பிரகடனம் செய்துதான் வென்றது.

**ரணில் விக்கிரமசிங்கவின் இன்றைய இலங்கை. உங்களுடைய பார்வை என்ன?**

அவர் ஜே.ஆரைப் போல ஒரு அவதந்திரி. சமூக பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றிய அவரது கரிசனைகள் குறைவானவை.

ஆனால் அவர் நெருக்கடியான ஒரு அரசு இயந்திரத்தை கையேற்றிருக்கிறார். அதனை இயக்குவதற்கு அனைத்து சமூகங்களிலும் அனுசரணை விரும்பியோ விரும்பாமலோ தேவை. அதனால் தான் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என ஆர்ப்பாட்டமாக கூறினார்.

ஆனால் அது இப்பொழுது நீர்த்துப் போய்விட்டது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை அரைவாசிக்கும் மேல் தீர்வு கண்டு விட்டதாக லண்டனில் பழமைவாதக் கட்சிகளின் மாநாட்டில் கூறியிருக்கிறார்.

சமூக .பொருளாதார பிரச்சினைகளிலும் அவ்வாறு தான் கூறி வருகிறார். இது மிகைப்படுத்தலும் பொய்யும் கலந்தது. துரதிர்ஷ்டவசமாக இந்த நெருக்கடி நிலையை தாண்டுவதற்கான உருப்படியான மாற்று எதுவும் இலங்கையின் அரசியல் வானில் தற்போது காணப்படவில்லை. சமூக, பொருளாதார பிரச்சினைகளில் கரிசனை உள்ளவர்கள் என்று கருதப்படுபவர்கள் கூட இலங்கையின் பன்முகப் பாங்கு, அதிகார பகிர்வு போன்ற விடயங்களில் அலட்சியமும் கள்ள மவுனமும் காக்கிறார்கள். பேரினவாதத்தை சவால் செய்ய முடியாதவர்களாக இவர்கள் இருக்கிறார்கள்.

**இன்றுள்ள பிராந்திய, சர்வதேச அரசியல் பொருளாதாரச் சூழலில் இலங்கை - இனப்பிரச்சினை - தமிழ், முஸ்லிம், மலைய மக்களின் உரிமைக்கான தீர்வு என்பதெல்லாம் என்ன வகையான எதிர்கொள்ளலைக் கொண்டுள்ளன?**

இன்று இலங்கையில் ஏற்பட்டிருக்கும் சமூக பொருளாதார நெருக்கடியில் தமிழ் - மலையக- முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து பொதுவானதும் தனித்துவமானதுமான கோரிக்கைகளை வலியுறுத்த வேண்டும். அரசு யந்திரம் சுதாகரித்துக் கொண்டபின் எதையும் பெற முடியாது. இறுமாப்புத்தான் மிகுதியாக இருக்கும். "எனவே காற்றுள்ள போதே தூற்றிக்கொள்"என்றவாறு இலங்கையின் தமிழ்-முஸ்லிம் -மலையக மக்கள் நடந்து கொள்ள வேண்டும்.

உலகளாவிய நெருக்கடி அல்லது உள்ளூர் அரசு இயந்திர நெருக்கடிகளில்தான் சமூக மாற்றங்கள், சீர்திருத்தங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இந்தத் தருணம் ஜனநாயக முற்போக்கு சிங்கள மக்களுடன் இணைந்து கொண்டு தமிழ் - முஸ்லிம் சமூகங்கள் எதிர்கொள்ள வேண்டியதொன்று.


NS Systems SECURITY
1300 108 555
REALTIME
SECURITY SYSTEM
PROTECTION
IP / HD CCTV Systems
Alarm Monitoring
Access Control
Video Intercom
Security Fog System
Smart Home
Data & Tele-communication
Ducted Vacuum
Solar CCTV
Digital TV Antenna
Security Alarm
UTECH SOLUTIONS
Corporate Group
Protect your Home & Family, Secure your Premises & Business.
1300 108 555 / 0447 533 555
www.nssystems.com.au / info@nssystems.com.au

Transco™ CARGO

=

#1 FREIGHT FORWARDER FROM AUSTRALIA TO SOUTH ASIA

ஒவ்வொரு வாரமும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஒரே நிறுவனம்

ONLINE TRACKING
SMS & EMAIL ARRIVAL NOTICE NOTIFICATION
LIVE CHAT ON WEBSITE
TRANSCO APP

We love to deliver

IF YOU MISS THE CUT-OFF THIS WEEK
YOU CAN SEND IT NEXT WEEK
IT'S AS EASY AS THAT

Weekly shipments exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield

206-208 Discovery Road
Dandenong South
(03) 9703 2255

45 Adrian Rd
Campbellfield
(03) 9357 7228

SYDNEY - 02 9897 0004
PERTH - 08 9452 7707
BRISBANE - 07 3219 0203
CANBERRA - 02 62821905
TASMANIA - 03 90174167
ADELAIDE - 08 8322 8825
DARWIN - 08 79790002

1300 1 TRANSCO (1300 187 267)
WWW.TRANSCOCARGO.COM.AU